## வேளாண்மை

இரண்டாண்டுகளின் குறைந்தளவு செயலாற்றத்தின் பின்னர் 1981ஆம் ஆண்டுக் காலத்தில் வேளாண்மைத்துறையின் வளர்ச்சி ஒரு ஊக்குவிக்கத்தக்க மட்டத்தை எடுத்துக்காட்டியது. தேயிலை, தெங்கு, நெற் துறைகளில் அவதானிக்கப்பட்ட சாதகமான வெளியீட்டுப் போக்குகளின் பெரும்காரணமாக முழுத்துறையும் 6.9 சதவீதங்கொண்ட வளர்ச்சி வீதத்தைப் பதிவு செய்தது. இது 1980 இன் 3.1 சதவீத வளர்ச்சி வீதத்துடன் ஒப்பிடற்பாலது.


1980 ஆம் ஆண்டுக் காலப்பகுதி முழுவதும் காணப்பட்ட கீழ்மட்டத்திலிருந்தும் மீட்சி பெற்ற தேயிலை உற்பத்தி 10 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது. தெங்கு உற்பத்தி முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட தாழ்ந்த மட்டங்களிலிருந்தும் 11 சதவீதத்தால் உயர்ந்தது. இவ்வாண்டுக்காலத்தில் சிறு ஏற்றுமதிப் பயிர்களின் ஏற்றுமதிச் செயலாற்றம், கடந்த அண்மைக்காலங்களில் இத்துணைத் துறை மந்தமான வளர்ச்சியிலிருந்தும் மீட்சியடைந்து சிறு ஏற்றுமதிப் பயிர்களின் உற்பத்தி வளர்ச்சிபடைந்திருந்தமையை எடுத்துக்காட்டியது. எனினும் பால் எடுக்கும் பரப்பில் ஏற்பட்ட வீழ்ச்சி, சராசரி விளைவு குன்றியமை ஆகியவற்றின் முக்கிய காரணமாக இறப்பர் உற்பத்தி ஏறத்தாழ 7 சதவீதமான வீழ்ச்சியைக் காட்டியது. பல மாவட்டங்களில் வரட்சி நிலைமைகள் நிலவியபோதும் களப்பயிர்களிடையே நெல் உற்பத்தி எல்லாக்காலத்திலும் 4.6 சதவீதம் கொண்ட உயர்ந்த வளர்ச்சி மட்டத்தை எடுத்துக்காட்டியது. 1980 ஆம் ஆண்டில் சிறிதளவான முன்னேற்றத்தை மட்டும் காட்டிய சிறு உணவுப்பயிர்கள் துணைத்துறையின் செயலாற்றம் 1981 இல் பல பயிர்கள் தமது வெளியீட்டு அதிகரிப்பைப் பதிவு செய்து நல்லதொரு நிலைமையை எடுத்துக்காட்டியது. மிளகாய் மட்டுமே விதிவிலக்கானதாக இருந்தது. சீனி உற்பத்தி 1 சதவீதத்தால் சிறிதளவாக அதிகரித்தது. வளமாக்கிப் பயன்பாடு பெருமளவிற்கு வீழ்ச்சிபடைந்தபோதும் பயிர் வேளாண்மைத்துறையின் உற்பத்தியில் இவ்வதிகரிப்புக்கள் பதிவு செய்யப்பட்டன. நெற்றுணைத்துறையின் வளமாக்கியில் ஏற்பட்ட பெரும் வீழ்ச்சியுடன், அனைத்து முதன்மைத்துணைத்துறைகளிலும் இவ்வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. பயிரல்லாத வேளாண்மைத்துறையைப் பொறுத்தவரை முட்டை உற்பத்தி 3 சதவீதத்தால் அதிகரித்திருக்குமென மதிப்பிடப்பட்டது. பல்வேறு தடைகள் இருந்தபோதும் கடற்றொழில்துறை அதன் உற்பத்தியை அதிகரித்தது.

1981 ஆம் ஆண்டில் வேளாண்மைத்துறையில் குறிப்பிடத்தக்க நிறுவன மாற்றங்கள் மேற்கொள்ளப்படவில்லை. 1979 இன் பிற்பகுதியில் ஆக்கப்பட்ட வேளாண்மைப் பணிகள் சட்டத்தின் செயற்பாடு மிக பின்தங்கி இருந்தது. நிலச்சீர்திருத்தச் சட்டத்தை மேலும் செயற்றிறன் மிக்கதாக்குவதற்கு பல திருத்தங்கள் ஆக்கப்பட்டன. பல்வேறு துறைகளின் நடவடிக்கைகள் கீழ் வரும் பிரிவுகளில் கூடியளவு விபரமான முறையில் ஆராயப்பட்டுள்ளன.

### தேயிலை

தேயிலை உற்பத்தி 1981 இல் 2,101 இலட்சம் கிலோக்கள் என மதிப்பிடப்பட்டு முன்னைய ஆண்டின் உற்பத்தியைவிட 187 இலட்சம் கிலோக்கள் அல்லது 10 சதவீத அதிகரிப்பை எடுத்துக்காட்டியது. இவ்வதிகரிப்பில் அனைத்து உயர வகைகளும் பங்குகொண்டன. உயர்நில வளர் தேயிலை 11 சதவீத அல்லது 79 இலட்சம் கிலோ அதிகரிப்பைப் பதிவுசெய்த வேளையில் தாழ்நிலவளர், மத்திய நிலவளர் தேயிலைகள் முறையே 71 இலட்சம் கிலோக்களாலும் (11 சதவீதம்)

# முதன்மை வேளாண்மைப் பயிர்களின் உற்பத்தி




இலங்கை மத்திய வங்கி

37 இலட்சம் கிலோக்களாலும் (7 சதவீதம்) அதிகரித்தன. மக்கள் தோட்ட அபிவிருத்திச்சபையின் சொந்தத் தோட்டங்களிலிருந்து பெற்ற தேயிலை உற்பத்தியில் 95 இலட்சம் கிலோக்கள் அல்லது 14 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்த வேளையில் வாங்கிய பச்சை இலையைக் கொண்டு தயாரிக்கப்பட்ட தேயிலையின் உற்பத்தி 7 இலட்சம் கிலோக்களால் அல்லது 10 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. இலங்கைப் பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் உற்பத்திச் செயலாற்றமும் இதே தன்மையையே பின்பற்றியது. இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் தமது சொந்தத் தோட்டங்களிலிருந்து பெற்ற தேயிலைகளின் உற்பத்தி 49 இலட்சம் கிலோக்கள் (8 சதவீதம்) கொண்ட அதிகரிப்பைப் பதிவுசெய்த வேளையில் வாங்கப்பெற்ற பச்சைத்தேயிலைகளிலிருந்தான உற்பத்தி 7 இலட்சம் கிலோக்களால் அல்லது 5 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. முன்னைய ஆண்டின் உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் உற்பத்தி தொடர்பான வளர்ச்சி கவர்ச்சிகரமாக காணப்படுகின்றபோதும் கடந்த ஆண்டின் உற்பத்தி வரட்சியினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டது என்பதனைக் கருத்திற்கொள்கையில் இன்னும் கூடிய முக்கியத்துவம் செலுத்தப்படவேண்டும். இயல்பான வானிலை நிலைமைகள் நிலவிய 1979 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பு 37 இலட்சம் கிலோக்கள் மட்டமாக அல்லது 2 சதவீதத்திற்கும் குறைவானதாக இருந்தது. எனவே 1981 ஆம் ஆண்டில் நிலவிய தொடர்பான சாதகமான வானிலை நிலைமைகளே முன்னைய ஆண்டினைக்காட்டிலும் தேயிலையின் மொத்தமான முன்னேற்றத்திற்குக் காரணம் என ஐயத்திற்கிடமின்றி விளக்கலாம்.

## அட்டவணை 1.8

### தேயிலைப் புள்ளிவிபரங்கள் 1979—1981

| விடயம் | கூறு | 1979 | 1980 | 1981 (அ) |
|---|---|---|---|---|
| 1. உற்பத்தி ... | ப. இ.கி.கிராம்கள் | 206.4 | 191.4 | 210.1 |
| 1.1. உயர் நிலம் ... | ப. இ.கி.கிராம்கள் | 76.5 | 72.6 | 80.5 |
| 1.2. மத்திய நிலம் ... | ப. இ.கி.கிராம்கள் | 62.5 | 55.6 | 59.3 |
| 1.3. தாழ் நிலம் ... | ப. இ.கி.கிராம்கள் | 67.4 | 63.2 | 70.3 |
| 2. பயிரிடப்பட்ட பரப்பளவு ... | '000 எக்டேயர் | 244 | 245 | 245 |
| 3. விளைச்சல் ... | கிகி/எக்டேயர் | 993 | 922 | வி.கி. |
| 4. வளமாக்கி வழங்கல்கள் ... | '000 மெ. தொன் | 105.4 | 109.9 | 103.3 |
| 5. மீளப் பயிரிடல் (ஆ) ... | எக்டேயர்கள் | 2,491 | 2,078 | 2,627 |
| 6. விலைகள் | | | | |
| 6.1. தேறிய கொழும்பு ... | ரூ / கி.கிராமுக்கு | 11.14 | 17.73 | 17.71 |
| 6.2. ஏற்றுமதி க. ஏ. பெ. ... | ரூ / கி.கிராமுக்கு | 30.51 | 33.41 | 34.00 |
| 7. உற்பத்திக்கான செலவு (ஆ) ... | ரூ / கி.கிராமுக்கு | 13.43 | 15.45 | 18.66 |
| 8. ஏற்றுமதிகள் ... | ப. இ. கி. கி. | 187.5 | 184.7 | 192.0 |
| 9. ஏற்றுமதி வருவாய் | ரூ. ப. இ.<br>(சிஎஉ. ப. இ.) | 5,722.2<br>(284) | 6,170.1<br>(287) | 6,444.0<br>(284) |
| 10. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக்கக்கூட்டப்பட்ட பெறுமதி (இ) ... | | 7.9 | 6.3 | (வி.கி.) |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) தற்காலிகம்.
(ஆ) திருத்தப்பட்டது.
(இ) பயிர்ச் செய்கையிலும் பதனிடலிலும் மட்டும்.

1981 இல் தேயிலைத்துறைக்கான வளமாக்கி வழங்கல்கள் 103,300 மெற்றிக் தொன்களாக விளங்கி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 6 சதவீத வீழ்ச்சியை எடுத்துக்காட்டியது. எனினும் மக்கள் தோட்ட அபிவிருத்திச்சபை, இலங்கை அரச பெருந்தோட்டக்கூட்டுத்தாபனம் ஆகியன அவற்றினல் முகாமைப்படுத்தப் படும் தேயிலைத்தோட்டங்களில் வளமாக்கிப்பயன்பாட்டில் அதிகரிப்புக்கள் பதிவு செய்யப்பட்டிருப்பதனுல் முன்னைய ஆண்டைப்போன்று சிறு உடமை நிலங்களை உள்ளடக்கிய தனியாருக்குச் சொந்தமான தேயிலை நிலங்களின் வளமாக்கிப்பயன் பாடே வீழ்ச்சியடைந்திருக்கக்கூடும். சிறு உடைமையாளர்கள்தமது நிலங்களில் வளமாக்கிப்பயன்பாட்டை பெருமளவிற்குக் குறைத்திருப்பதை இது எடுத்துக் காட்டுகிறது. தனியாருக்குச்சொந்தமான தேயிலை நிலங்களின் வளமாக்கிப் பயன் பாட்டில் ஏற்பட்ட இவ்வீழ்ச்சி முக்கியமாக, 1981 ஆம் ஆண்டின் பெப்புருவரி யிலும் செத்தெம்பரிலும் அறிவிக்கப்பட்ட வளமாக்கி விலை அதிகரிப்புக்களின் விளைவாகும்.

1981 ஆம் ஆண்டில் தேயிலைப் பயிர்ச்செய்கையின் கீழ் பதிவு செய்யப்பட்ட பரப்பு முன்னைய ஆண்டினளவினதாகவே காணப்பட்டது. எனினும் கடந்த சில ஆண்டுக்காலத்தில் குறிப்பிட்ட அளவான தேயிலை நிலங்கள் உற்பத்தியின்றிப் போயிருக்கலாம் என மதிப்பிடப்பட்டது. மறுபுறத்தில் சில புதிய தேயிலை நிலங்கள் பதிவு செய்யப்படவில்லை. அவ்வாறிருந்தும் பின்னையதற்காக ஓரள விற்கு கழிவு செய்தபின்னும் நாட்டில் பதிவு செய்யப்பட்ட தேயிலைப் பரப்பு உண்மையில் பயிரிடப்படுகின்ற அளவினைவிட கூடுதலாகவே மதிப்பிடப்பட்டிருக் கின்றது போல தோன்றுகின்றது. அண்மைய கடந்தகாலங்களில் ஏற்பட்ட மாற்றங் களைப் பிரதிபலிப்பதற்காக தேயிலை நிலங்களின் பதிவேடுகளைத் திருத்துவது மிக அவசர தேவையாகும்.

1980 ஆம் ஆண்டில் 2,078 எக்டேயர்களாக இருந்த மீளநடப்பட்ட பரப்பு 1981 இல் 2,627 எக்டேயர்களுக்கு அதிகரித்தமைக்கு இலங்கை அரச பெருந் தோட்ட கூட்டுத்தாபனத்தின் சிறந்த செயலாற்றமே காரணமாகும். இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தால் மீளநடப்பட்ட பரப்பளவு 449 எக்டேயர்களால் அதிகரித்தது. மக்கள் தோட்ட அபிவிருத்திச்சபையும் மீளநடப் பட்ட பரப்பளவில் 94 எக்டேயர்கள் கொண்ட அதிகரிப்பைப் பதிவு செய்தது. தனியார்துறையின் மீள்நடுகைச் செயலாற்றம் தொடர்ந்தும் மிகத்திருப்தியற்ற தாக இருப்பதைக் கிடைக்கத்தக்கதாக இருக்கும் விபரங்கள் எடுத்துக்காட்டு கின்றன. இவ்வாண்டுக்காலத்தில் மீள்நடுகைப்பரப்பளவு குறிப்பிடத்தக்களவில் உயர்ந்தபோதும் ஆண்டு அடைவுகள் தொடர்ந்தும் முழுத்துறைக்குமாக ஏற்படுத் தப்பட்ட இலக்கிற்கு மிகக் கீழேயே இருந்தன. 1981 ஆம் ஆண்டு முடிவில் மீள நடப்பட்ட மொத்தப் பரப்பளவு 38,766 எக்டேயர்களாக அல்லது பதிவுசெய்யப் பட்ட மொத்தப் பரப்பில் 16 சதவீதமாக இருந்தது. குறைந்த மீள்நடுகைச் செயலாற்றத்தைக் கருத்திற்கொண்டு தனியாருக்குச் சொந்தமான தேயிலை நிலங் களில், மீள்நடுகைக்கான உதவுதொகை 1981 நவெம்பரிலிருந்து உயர், மத்திப நிலவளர் பரப்புக்களுக்கு ஏக்கரொன்றிற்கு ரூ. 12,500 இற்கும்(எக்டேயர் ஒன்றிற்கு ரூ. 30,888) தாழ்நிலவளர் பரப்பிற்கு ஏக்கரொன்றிற்கு 10,000 இற்கும் (ஏக்க ரொன்றிற்கு ரூ. 24,711) உயர்த்தப்பட்டது. எனினும் அரசுடைமையாக்கப்பட்ட பெருந்தோட்டங்களுக்கான மீள்நடுகை உதவுதொகை மாற்றமின்றியிருந்தது. புதிய உதவுதொகை வீதங்கள் இருந்தும்கூட உயர்ந்த மீள்நடுகைச் செலவு, உதவு தொகைகள் மீள்நடுகைக்கான மொத்தச் செலவை உள்ளடக்காமை ஆகியன தனியார்துறையின் மீள்நடுகைக்கான செயலாற்றத்தில் வெளிப்படையான தாக் கத்தை ஏற்படுத்தமாட்டாது என நம்பப்படுகிறது.

தேயிலைக் கைத்தொழிலின் நீண்டகால நன்மைகளுக்கு விறுவிறுப்பான மீள் நடுகை நிகழ்ச்சித்திட்டம் மிக முக்கியமான ஒன்று என்பதுடன் தற்போதைய உதவு தொகை வீதங்கள் ஏறத்தாழ உண்மையான மீள்நடுகைச் செலவிற்கு மேல் நோக்கி உயர்த்தப்படவேண்டும் என்பதும் மிக இன்றியமையாதது போல் தோன்று கின்றது. உயர்த்தப்பட்ட வீதங்களின் முழு நன்மைகளையும் ஒன்று திரட்டும் பொருட்டு மீள்நடுகை உதவுதொகைத்திட்டத்துடன் தொடர்புறுகின்ற நிருவாக ஒழுங்குகளும் தேவையற்ற தாமதங்களை தவிர்ப்பதை மேலும் உறுதிப்படுத்த வேண்டும்.

தேயிலையின் சராசரி ஏற்றுமதி (க. ஏ. பெ.) விலை 1981 இல் 2 சதவீதத்தால் சிறிதளவாக திருந்தியவேளையில் தேறிய சராசரி (வரி தவிர்ந்த) கொழும்பு ஏல விலை கள் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தன. ஏற்றுமதி (க. ஏ. பெ.) விலைகளில் ஏற்பட்ட சிறிதளவான முன்னேற்றத்திற்கு ரூபாவில் ஏற்பட்ட பெறுமானத்தேய்வே பெரு மளவு காரணமாகும். விலைகளில் ஏற்பட்ட இச்சிறிதளவான முன்னேற்றம், உற்பத்தியாளர் இலாபங்களில் குறிப்பிடத்தக்க சீர்கேடுகளுக்கு வழி வகுத்த உற்பத்திச்செலவு பெருமளவு அதிகரித்தமையால் எதிரீடு செய்யப்பட்டது. வள மாக்கி, மின்வலு ஆகியவற்றின் உயர்ந்த விலைகள் உயர்ந்த வட்டிகளுடன் சேர்ந்து உற்பத்திச் செலவின் மொத்த அதிகரிப்பிற்கு வகைகூறியது. தயாரிப்புச் செலவில் ஏற்படும் அதிகரிப்புக்களை எதிர்த்துச் சமாளிப்பதற்கு உற்பத்தியாளர்களுக்கு உதவியளிப்பதைக் கருத்திற்கொண்டு தொழிற்சாலைகளினால் தனியார் உடைமை களிலிருந்து வாங்கப்பட்ட கொழுந்துத் தேயிலைப் பதனிடலுக்கான தயாரிப்புக் கட்டணம் போன்ற கழிவு செய்யத்தக்க தொகை ‘‘விலை ஆதரவு வழிமுறைத் திட்டத்தின்’’ கீழ் கிலோவொன்றிற்கு ரூ. 5.40 இலிருந்து கிலோவொன்றிற்கு ரூ. 6.12 இற்கு உயர்த்தப்பட்டது.

உற்பத்தியாளர் இலாபம் மோசமடைவதனைக் கட்டுப்படுத்துவதற் கும், கூட்டப்பட்ட பெறுமதி வடிவங்களில் தேயிலையின் ஏற்றுமதியை ஊக்குவிப் பதற்கும் இவ்வாண்டுக் காலத்தில் தேயிலைக் கைத்தொழில் தொடர்பாக பல இறைவழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. உறைகளிலடைக்கப்பட்ட தேயிலை, சிறு பொதிகளிலடைக்கப்பட்ட தேயிலைகளின் ஏற்றுமதிக்கான பண ஊக்குவிப்புத் திட்டம் 1981 ஏப்பிரலில் தீர்வைத் தள்ளுபடித்திட்டத்தின் மூலம் நீக்கப் பட்டது. பின்னர் 1981 நவெம்பரில் உறைகளிலடைக்கப்பட்ட தேயிலை மீதான ஏற்றுமதித்தீர்வை கிலோவொன்றிற்கு ரூ. 8.50 இலிருந்து ரூ. 6.50 இற்கும் அடைக்கப்படாத தொகைத் தேயிலையின் மீதான அத்தீர்வை கிலோவொன்றிற்கு ரூ. 10.50 இல் இலிருந்து ரூ. 8.00 இற்கும் குறைக்கப்பட்டது. விலையின் மீது செலுத்தப்படவேண்டிய தேயிலைப் பெறுமான விகித வரி கிலோவொன்றிற்கு ரூ. 18.00 இலிருந்து ரூ. 22.00 இற்கு உயர்த்தப்பட்டதுடன் வரி விகிதம் கிலோ ஒன்றிற்கான ரூ. 22.00 இற்கு மேலான மிகையின் 35 சதவீதத்தில் விதிக் கப்பட்டது. இம்மாற்றங்கள் குறுங்காலத்தில் அரசிற்குக் கணிசமான வருமான இழப்புக்குக் காரணமாக இருந்தாலும் இவை எதிர்காலக் கைத்தொழில் அபி விருத்திக்கு உதவும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

உயர்ந்து செல்லும் உற்பத்திச் செலவில் சிக்கியிருக்கும் சிறு நில உடைமை யாளர்களுக்கு இடர்நீக்கம் வழங்கும் நோக்கில் விலை ஆதரவு வழிமுறைத் திட்டத்தின் கீழ் பச்சைக் கொழுந்துத் தேயிலைக்கு வழங்கப்பட்ட ஆகக்குறைந்த உத்தரவாத விலை 1981 மாச்சில் கிலோவொன்றிற்கு ரூ. 2.20 இலிருந்து ரூ. 2.53 இற்கு உயர்த்தப்பட்டது. இவ்வதிகரிப்பு உயர்ந்த வளமாக்கிவிலை, கூலி ஆகிய வற்றின் விளைவாக இவ்வாண்டில் அதிகரித்த உற்பத்திச் செலவை ஈடுசெய்யப்

போதுமானதாக இருக்கவில்லை. மத்திய வங்கியால் நடத்தப்பட்ட அளவைகளால் எடுத்துக்காட்டப்பட்டவாறு பல்வேறுவகைப்பட்ட நடுவர்களூடாக தமது தேயிலையை விற்ற பெரும்பாலான சிறுநில உடைமையாளர்கள் ஆகக்குறைந்த உத்தரவாத விலையிலும் பார்க்க மிகக்குறைந்த விலையைப் பெற்றமையும் கவனிக்கப்படவேண்டிய ஒரு விடயமாகும். பச்சைத் தேயிலையின் சந்தையின் உயர்ந்தளவு குறைப்பாட்டினை விளக்குகிறது. விலை ஆதரவு வழிமுறைத்திட்டத்தின்கீழ் கொடுக்கப்படும் உத்தரவாதவிலை போன்ற பல்வேறு உதவித்திட்டங்களிலிருந்து சிறு உடைமையாளர்கள் நன்மை பெறுவதை இயலச்செய்வதற்காக இவற்றின் சந்தைக் குறைபாடுகள் இயன்றவரைக்குக் குறைக்கப்படவேண்டும். மத்திய வங்கியின் ஒன்று திரட்டப்பட்ட தரவுகள் நிறுவனக் கொடுகடனைப் பெறுவதற்கான வழிகள் குறைவாக இருப்பதே சிறு உடைமையாளர் துறையின் அபிவிருத்தி மீது இறுக்கமான தடைகளை ஏற்படுத்தியிருப்பதை எடுத்துக்காட்டின. சிறு உடைமையாளர்துறையில் ஆகக்கூடிய உற்பத்தியின் முழு ஆற்றலைப் பெறும் பொருட்டு பொருளாதாரத்தின் சிறு உடைமையாளர்களின் கொடுகடன்தேவை மீது அரசுடைமையாக்கப்பட்ட வர்த்தக வங்கிகள் தமது கவனத்தைச் செலுத்தவேண்டும். இந்நோக்கில் திட்டமிடப்பட்ட ''தேயிலை, இறப்பர் சிறு உடைமையாளர்களுக்கான வளமாக்கிக் கொடுகடன் திட்டம்'' சிறு உடைமையாளர்களுக்காக நிறுவனக் கொடுகடனின் இலகுவான வழிமுறையை நோக்கி மேற்கொள்ளப்பட்ட ஒரு குறிப்பிடத்தக்க நடவடிக்கையாகக் கருதப்படலாம்.

எட்டு அரசதுறைக் கூட்டுத்தாபனங்கள்/ சபைகள்/ பதிவுசெய்யப்பட்ட தேயிலைப் பரப்பளவு (52 சதவீதம்) மொத்தமாகப் பெறப்பட்ட தேயிலை உற்பத்தி ஆகிய இரண்டிலும் தொடர்ந்தும் முக்கியபங்கிற்கு வகைகூறின, இவ்வாண்டில் இக்கூட்டுத்தாபனங்கள் /சபைகள் எண்ணற்ற பிரச்சினைகளால் நெருக்கடிக்குள்ளாயின. கடந்த ஆண்டைப்போலவே இந்நிறுவனங்களின் திரவச் சிக்கல்கள் தொடர்ந்தும் வங்கிமேலதிகப் பற்று வசதிகளிலும், பல்வேறுபட்ட வங்கி நிதியியல் முறைகளிலும் தங்கியிருக்கக் கட்டாயப்படுத்தின. இத்தங்கியிருப்புக்களினுல் தோன்றிய உயர்ந்த வட்டிகள், அவற்றின் உற்பத்திச்செலவு அதிகரிப்பிற்கு ஓரளவு பொறுப்பாகவிருந்தன. உற்பத்தியில் பாதகமான தாக்கங்கள் எதுவுமின்றி வளமாக்கிப்பயன்பாட்டைக் குறைப்பது கடினமாக இருந்தமையால் வளமாக்கி விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு அவர்களின் சிக்கல்களை மேலும் அதிகரித்தது. முன்னைய ஆண்டுக்கானவற்றுடன் ஒப்பிடுகையில் உயர்ந்துசெல்லும் உற்பத்திச் செலவுகளுக்கிடையில் உற்பத்தியாளரின் விலை வீழ்ச்சி உற்பத்தியாளர் இழப்பில் மேலும் அதிகரிப்பை விளைவித்தன. எனினும் தனியார்துறைப் பயிர்ச்செய்கையின் உற்பத்தியாளர் இலாபங்கள்; அவர்கள் இவ்வாண்டில் பெற்ற சிறந்த விலைகள், அத்துடன் ஒரு அலகிற்கான குறைந்த உற்பத்திச்செலவு ஆகியவற்றின் காரணமாக மிகவும் சாதகமாக இருந்திருக்கின்றதுபோல் தோன்றுகின்றது.

முன்னைய ஆண்டறிக்கைகளில் வலியுறுத்தப்பட்டவாறு அரசுடைமையாக்கப்பட்ட பெருந்தோட்டங்களின் முகாமை கைத்தொழிலின் அனைத்து ஊழியருக்கும் பொருத்தமான ஊக்குவிப்பு அமைப்பை ஏற்படுத்துவதன் மூலமாக குறிப்பிடத்தக்களவிற்கு முன்னேற்றப்படவேண்டும். அத்தகைய ஊக்குவிப்பு அமைப்பு இன்றி, வெளிநாடுகளிலிருந்து கடனுகப்பெறக்கூடிய மூலவளங்களை உள்ளடக்கிய மூலதன முதலீட்டில் ஏற்படும் அதிகரிப்புக்களினுல் விரும்பத்தக்க நோக்கங்களை அடையமுடியாது போகநேரிடும். தேயிலை சிறுநில உடைமையாளர்துறைக்கு உதவுகின்ற பணிநிறுவனங்களை வலுப்படுத்துவதும் அதேயளவிற்கு இன்றியமையாததாகும். முன்னைய ஆண்டறிக்கைகளில் எடுத்துக் காட்டப்பட்டவாறு இத்துறையின்

DISCARDED

அபிவிருத்திக்காக ஏற்படுத்தப்பட்ட தேயிலை சிறு உடைமையாளர் அபிவிருத்தி மேலாண்மைச்சபை மூலவளங்களையோ அல்லது சிறு உடைமையாளர்களின் சிக்கல்களை தீர்ப்பதற்கு போதுமான மேலாண்மையையோ கொண்டிருக்கவில்லை. விரைந்த வளர்ச்சிக்கான பெருமளவு ஆற்றல் வளம் சிறு உடைமையாளர் துறையில் குறிப்பாக காலி, மாத்தறை, மாவட்டங்களில் காணப்படுகின்றது. எனினும் இவ்வுள்ளார்ந்த வளங்களைப் பெற்றுக்கொள்வது, பொருத்தமான கொள்கைத் தூண்டுதல்களிலும், பயன்மிக்க பணி அமைப்புக்களுக்கான ஏற்பாடுகளிலுமே தங்கியிருக்கின்றது. பெருந்தோட்ட முகாமையால் அடிக்கடி கேட்கப்படும் ஏற்றுமதித்தீர்வைக் குறைப்புக்கள் போன்ற இறைவிடுவிப்பு நிறுவன அமைப்பில் உள்ள குறைபாடுகள் குறைக்கப்படாவிடின் அரசிற்கான வருவாய் இழப்பை மாத்திரமே ஏற்படுத்தும் என்பது வற்புறுத்தப்படவேண்டும்.

## இறப்பர்

*1981* இல் இறப்பர் உற்பத்தி *1,240* இலட்சம் கிலோக்களாகத் தற்காலிகமாக மதிப்பிடப்பட்டு 1980 ஆம் ஆண்டு உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் 7 சதவீத வீழ்ச்சியை எடுத்துக்காட்டியது. உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி முக்கியமாக பால் எடுப்பதன் கீழான பரப்பளவு வீழ்ச்சியடைந்தமை, சராசரி விளைவு வீழ்ச்சியடைந்தமை இரண்டினதும் விளைவாகும்.

இவ்வாண்டுக்காலத்தில் பிடுங்கப்பட்ட இறப்பர் மரங்களின் பரப்பளவு 6,771 எக்டேயர்களாக இருந்ததுடன் இது இவ்வாண்டு உற்பத்திக்குள் வந்த பரப்பளவைவிட கணிசமானளவில் கூடுதலாகவும் இருந்தது. இது பாலெடுத்தலின் கீழிருந்த பரப்பளவில் 2 சதவீதம்கொண்ட தேறிய குறைவு ஏற்பட வழியமைத்தது. கடந்த காலங்களில் மீள் நடுகைச் செயலாற்றம் மிகக்குறைவாக நடைபெற்றமை, எதிர்காலத்தில் மீள் நடுகை நடவடிக்கைகள் விரைவுபடுத்தப் படுகின்றமை ஆகிய காரணங்களினால் பால் எடுப்பதன் கீழான பரப்பளவு எதிர் காலத்தில் இன்னும் பல ஆண்டுகளுக்கு தொடர்ந்தும் வீழ்ச்சியடையும் போலும்.

அட்டவணை 1.9

**இறப்பர் புள்ளிவிபரங்கள் 1979 — 1981**

| விடயம் | கூறு | 1979 | 1980 | 1981 (அ) |
|---|---|---|---|---|
| 1. உற்பத்தி .. | ப.இ. கி.கிராம்கள் | 153 | 133 | 124 |
| 2. பரப்பளவு | | | | |
| 2.1 பயிர் செய்கைக்குட்பட்ட .. | '000 எக்டேயர் | 226.4 | 227.3 | 222.8 |
| 2.2 பால் எடுப்பதற்குட்பட்ட ... | '000 எக்டேயர் | 186.6 | 185.6 | 182.5 |
| 3. விளைச்சல் ... | கி. கி./எக்டேயர் | 820 | 718 | 678 |
| 4. வளமாக்கி வழங்கல் ... | 1000 மெ.தொன் | 23.2 | 22.0 | 16.8 |
| 5. மீளப் பயிரிடல் ... | எக்டேயர்கள் | 4,168 | 5,434 | 6,442 |
| 6. விலைகள் | | | | |
| 6.1 ஏற்றுமதிகள் க. எ. பெ. ... | ரூ. / கி. கி. | 19.44 | 21.42 | 21.75 |
| 6.2 கொழும்பு ஆர். எஸ். எஸ். I ... | ரூ. / கி. கி. | 9.15 | 10.62 | 10.11 |
| 7. உற்பத்திச் செலவு ... | ரூ. / கி. கி. | 6.86(ஆ) | 8.20(ஆ) | 8.97(ஆ) |
| 8. ஏற்றுமதிகள் .. | ப. இ. கி. கி. | 128.2 | 120.9 | 120.0 |
| 9. உள்நாட்டு நுகர்வு ... | ப. இ. கி. கி. | 10.6 | 14.9 | 16.2 |
| 10. ஏற்றுமதி வருவாய்கள் ... | ரூ. ப. இ. (சிஎஉ. ப. இ.) | 2,491.6 (124) | 2,590.5 (120) | 2,895.0 (128) |
| 11. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாகக் கூட்டப்பட்ட பெறுமதி (இ) ... | | 4.1 | 3.1 | வி. கி. |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

– (அ) தற்காலிகம்

(ஆ) அரச துறைப் பெருந் தோட்டங்கள், தனியார் துறைப் பெருந் தோட்டங்கள், சிறு உடைமையாளர்களின் உற்பத்தியின் கணிக்கப்பட்ட சராசரி செலவு.

(இ) பயிர் வளர்த்தலிலும் பதனிடலிலும் மட்டும்.

1981 இல் ஒரு எக்டேயருக்கான சராசரி விளைவு 6 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. சராசரி விளைவில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு எண்ணற்ற காரணிகள் காணப்பட்டன. மிகமுக்கிய காரணிகளாக இறப்பர் மரங்களில் முதிர்ச்சித் தன்மை அதிகரிக்கின்றமை, 1981 ஆம் ஆண்டின் முற்பகுதியில் நிலவிய வரட்சி, சிறு உடைமையாளர்களால் எதிர்நோக்கப்பட்ட சந்தைப்படுத்தல் பிரச்சனைகள் போன்றனவாகும். பின்னைய இரண்டு காரணிகளையும் 1980 ஆம் ஆண்டுடன் தொடர்புறுத்திப்பார்க்கையில் 1981 இல் பால் எடுக்கும் நாட்களின் எண்ணிக்கை குறைப்பிற்கு வழிவகுத்தது. அத்துடன் வளமாக்கிப்பயன்பாட்டில் ஏற்பட்ட குறைவும் விளைவின்மீது குறிப்பிடத்தக்க பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. இவ்வாண்டுக்காலத்தில்இறப்பர் நிலங்களின் வளமாக்கிப்பயன்பாடு 24சதவீதத்தால் 16,800 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியடைந்தது. பாதகமான கால நிலை நிலைமைகளுடன், நடைமுறைக்கு வந்த உயர்ந்த வளமாக்கி விலைகளும் இணைந்து வளமாக்கிப் பயன்பாட்டில் ஏற்பட்ட இவ்வீழ்ச்சிக்குப் பொறுப்பாகவிருந்தன. அண்மைய எதிர்காலத்தில் பால் எடுப்பதன் கீழான பரப்பளவு குறைவடையலாம் என்பதால் உற்பத்தி அதிகரிப்பு எக்டேயருக்கான சராசரி விளைவின் அதிகரிப்பிலேயேமுழுமையாக தங்கியிருக்கிறது. இக்கருத்தில் பார்க்கும்பொழுது வளமாக்கிப் பாவனையில் ஏற்படும் சார்பான வீழ்ச்சியும் உண்மைநியதிகளில் வளமாக்கிப் பயன்பாட்டின் குறைந்த மட்டமும் கொள்கைவகுப்போரின் உடனடிக்கவனத்திற்குரியனவாகும்.

மக்கள் தோட்ட அபிவிருத்திச்சபை, இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றிற்குச்சொந்தமான தோட்டங்களில் இறப்பர் உற்பத்தி 1981 இல் சிறிதளவு வீழ்ச்சியை எடுத்துக்காட்டியதுடன் பால்எடுப்பதன் கீழான அவற்றின் பரப்பளவும் 4 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. இவ்விரண்டு நிறுவனங்களும் சேர்ந்து முன்னைய ஆண்டின் 505 இலட்சம் கிலோக்கள் அல்லது 38 சதவீதத்திற்கெதிராக 1981 இல் நாட்டின் உற்பத்தியில் 502 இலட்சம் கிலோக்களுக்கு அல்லது 41 சதவீதத்திற்கு வகைகூறின. இதனால் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி (90 இலட்சம் கிலோக்கள்) முழுவதும் தனியார்துறைக்குச் சொந்தமான நிலங்களில் முக்கியமாக 4 எக்டேயர்களுக்கும் குறைவான பரப்பளவைக் கொண்டசிறு உடைமைகளிலேயே ஏற்பட்டிருக்க வேண்டும்போல் தோன்றுகின்றது.

மீளநடப்பட்ட பரப்பளவு 1981 ஆம் ஆண்டில் தொடர்ந்தும் கணிசமான அளவில் அதிகரித்தது. இவ்வாண்டில் 6,442 எக்டேயர் கொண்ட பரப்பளவு மீள்நடுகை செய்யப்பட்டதுடன் 1980 இன் மீள்நடுகைப் பரப்பளவுடன் ஒப்பிடுகையில் 19 சதவீத அதிகரிப்பையும் பதிவு செய்தது. 1980 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட மீள்நடுகை உதவுதொகை அதிகரிப்பு மீள்நடுகையின் மீது சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றதுபோல் தோன்றுகின்றது. 1981 முடிவில் மீள்நடுகை செய்யப்பட்ட மொத்தப்பரப்பு 156,390 எக்டேயர்களாக அல்லது பயிர்ச் செய்கையின் கீழுள்ள மொத்தப் பரப்பில் 70 சதவீதமாக இருந்தன. தனியார்துறையில் மீள்நடுகையை விரிவுபடுத்தும் நோக்கில் தனிப்பட்ட பெருந் தோட்டங்கள், சிறு உடமையாளர்களுக்கான மீள்நடுகை உதவுதொகை 1981 நவெம்பரில் ஏக்கரொன்றுக்கு ரூ. 6,500 (எக்டேயரொன்றுக்கு ரூ. 16,062) இலிருந்து ஏக்கரொன்றிற்கு ரூ.7,500(எக்டேயரொன்றுக்கு ரூ. 18,533)இற்கு உயர்த்தப்பட்டது. இவ்வாண்டில் மீள்நடுகைச் செலவில் ஏற்பட்ட அதிகரிப்புக்கள் உதவுதொகைவீதத்தை உயர்த்தவேண்டிய அவசியத்தை ஏற்படுத்தியது. மீள்நடுகைஉதவுதொகையின் இம்மேல் நோக்கிய திருத்தத்துடன் மீள்நடுகை உதவுதொகை நிதியை அதிகரிப்பதற்காக மீள்நடுகை தீர்வை கிலோவொன்றிற்கு 50 சதத்திலிருந்து 75 சதமாக உயர்த்தப்பட்டது.

1981 இல் 1,056 எக்டேயர் பரப்பு புதிதாகப் பயிரிடப்பட்டது. இது முன்னைய ஆண்டைக் காட்டிலும் 8 சத வீதங் கொண்ட அதிகரிப்பை எடுத்துக் காட்டியது. புதிதாகப்பயிர் செய்தலுக்கு ஏக்கரொன்றிற்கு ரூ. 2,700 (எக்டேயருக்கு ரூ. 6672) ஆக இருந்த உதவுதொகை வீதம் புதுப்பயிரிடலுக்கான செலவை முழுமையாக ஈடுசெய்யப்போதுமானதாக இல்லாமையால் அரசு 1981 நவெம்பரில் உதவு தொகையை ஏக்கரொன்றிற்கு ரூ. 6,750 இற்கு (எக்டேயருக்கு ரூ. 16679) அதிகரித்தது. இவ்வதிகரிப்பு 1982 ஆம் ஆண்டுக்காலத்தில் புதிய பயிரிடுகையில் கணிசமான அளவில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இறப்பர் துறையில் உற்பத்தியாளர் இலாபங்கள் 1981 ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்களவிற்கு மோசமடைந்தது. தனியார்துறையில் சிறு உடைமையாளர் ஏனைய உற்பத்தியாளர்களுக்கான உற்பத்தியாளர் இலாபங்கள் 1980 இல் கிலோவொன்றிற்கு ரூ. 2.33 ஆகவும் ரூ. 2.98 ஆகவும் இருந்து கிலோவொன்றிற்கு முறையே 21 சதத்திற்கும் 92 சதத்திற்கும் வீழ்ச்சியடைந்திருக்கின்றது என மதிப்பிடப்பட்டது. மக்கள் தோட்ட அபிவிருத்திச்சபையாலும், இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினாலும் எடுத்துக் காட்டப்பட்ட இழப்புக்கள் 1981 இல் அதிகரித்தன. இலாபங்களில் ஏற்பட்ட குறைவீழ்ச்சி; பன்னாட்டு இறப்பர் சந்தையில் ஏற்பட்ட மந்தம், உற்பத்திச் செலவின் அதிகரிப்பு ஆகியவற்றின் கூட்டு விளைவாகும். குறைந்த விலைகளினால் பாதிக்கப்பட்ட உற்பத்தியாளர்களுக்கு நிவாரணத்தை வழங்கும் பொருட்டு 1981 யூலையில் அரசு இறப்பரின் மீதான ஏற்றுமதித் தீர்வைகளில் படிமுறை அளவைச் சீராக்கியது. தீர்வை விதிக்கப்படக்கூடிய விலையின் ஆகக்குறைந்த மட்டம் கிலோவிற்கு 10 ரூபாவிற்கு அதிகரிக்கப்பட்டது. 1981 இன் முதற் காலாண்டுப் பகுதியில் சீன ஏற்றுமதிக்கான இறப்பர் கொள்வனவு அளவு குறைவடைந்தமை உள்படத் தட்டை இறப்பர் சந்தையில் காணப்பட்ட சாதகமற்ற அபிவிருத்தியின் காரணமாக இறப்பர் போன்ற ஏற்றுமதியில் இதுநாள்வரை பண்டக் கொள்வனவு ஆணையாளரால் அனுபவிக்கப்பட்டு வந்த தனியுரிமை மீளப்பெறப்பட்டதன் மூலம் 1981 இன் முதற் காலாண்டுப்பகுதியில் சிறந்த தர தட்டை இறப்பர் ஏற்றுமதி(ஆர்.எஸ்.எஸ்.1,2,3.) தாராளமாக்கப்பட்டது. ஒழுங்கான தட்டை இறப்பர் ஏலங்களும் இலங்கை வர்த்தக சம்மேளனத்தினால் செய்யப்பட்டன. இவ்வாண்டின் இரண்டாம் அரைப் பகுதியில் ஏலங்கள் தட்டை இறப்பர் விலைகளில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றதுபோல் தோன்றுகிறது.

இறப்பரின் உள்ளூர் நுகர்வு 1980 இல் 149 இலட்சம் கிலோக்களிலிருந்து 1981 இல் 162 இலட்சம் கிலோக்களுக்கு அதிகரித்தது. இது 9 சத வீதங் கொண்ட ஒரு அதிகரிப்பாகும். கடந்த ஆண்டின் ஆண்டறிக்கையில் குறிப்பிட்டவாறு இறப்பரிலிருந்தான ஏற்றுமதி வருவாய்களை உயர்த்துவதற்கு நாட்டில் இறப்பரை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களை விரிவுபடுத்துவதற்கான வாய்ப்பு இருக்கின்றது.

தெங்கு

1981 இல் தெங்கு உற்பத்தி 22.580 இலட்சம் காய்களென மதிப்பிடப்பட்டு முன்னைய ஆண்டினைவிட 11 சதவீதங்கொண்டதொரு அதிகரிப்பை பதிவு செய்தது. கடந்த ஆண்டின் 15 சதவீதங்கொண்ட வீழ்ச்சியைக் கருத்திற்கொள்கையில் இது குறிப்பிடத்தக்க முன்னேற்றமாகும். அவ்வாறெனினும் எழுபதாம் ஆண்டுகளின் தொடக்கத்திலிருந்த சராசரியான 25,000 இலட்சமளவிலான உற்பத்தியை பெறும் நோக்கில் கைத்தொழிலை மேலும் வலுவுறச் செய்வதற்கு ஒருங்கிணைந்த முயற்சி எடுக்கப்படவேண்டும்.

1981 ஆம் ஆண்டின் தொடக்கப்பகுதியில் உற்பத்தி குறைந்தமைக்கு முன்னைய ஆண்டின் பிற்பகுதியில் நிலவிய வரட்சியின் பாதகமான தாக்கங்களே காரணமாகும். இதனால் 1980 ஆம் ஆண்டு வளமாக்கிப் பாவனையில் காணப்பட்ட அதிகரிப்பிலிருந்தும் எதிர்பார்க்கப்பட்ட பலன் கட்டுப்படுத்தப்பட்டது. எனினும் திருந்திய காலநிலை, அதிகரித்த வளமாக்கிப் பாவனையின் விளைவுகளைத் தாமதமாக்கியதன் பலனாக ஆண்டு நடுப்பகுதியில் உற்பத்தியில் அதிகரிப்பு ஏற்பட்டது.

தெங்கு நிலங்களில் வளமாக்கிப்பாவனை தொடர்ந்தும் விதந்துரைக்கப்பட்ட மட்டத்திற்கும் கணிசமானளவு குறைவாகவே இருந்தது. கடந்த அண்மைக்காலங்களில் அவதானிக்கப்பட்ட வளமாக்கிப் பாவனையின் சாதகமான போக்கு இவ்வாண்டுக்காலத்தில் மாறி வழங்கல் 37,654 மெற்றிக் தொன்களாகக் குறைந்து முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 32 சதவீத வீழ்ச்சியையும் எடுத்துக் காட்டியது. இக்கணிசமான வீழ்ச்சி; குறிப்பாக ஆண்டின் இறுதி இரண்டு காலாண்டுகளில் ஏற்பட்டமைக்கு, 1981 பெப்புருவரியிலும் செத்தெம்பரிலும் வளமாக்கி விலைகள் அதிகரித்தமையும், சாதகமற்ற காலநிலை காரணமாக அதிகரித்த வளமாக்கிப் பயன்பாட்டிலிருந்தான அறுவடை வருவாய்களின் தாமதம் ஊக்கமளிக்காமல் இருந்ததுமே காரணமாகும்.

தெங்கு வளமாக்கிக் கொடுகடன் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1981 இல் கணிசமானளவிற்கு வீழ்ச்சியடைந்தது. 1980 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ரூ. 70 இலட்சங்கொண்ட மொத்தத் தொகையுடன் ஒப்பிடுகையில் 1981 ஆம் ஆண்டுக்காலத்தில் ரூ. 40 இலட்சங்கொண்ட மொத்தத்தொகையே வழங்கப்பட்டது. வளமாக்கிப்பாவனையில் ஏற்பட்ட வீழ்ச்சி தொடருமாயின் அடுத்துவரும் ஆண்டுகளில் கைத்தொழிலின் அபிவிருத்தி மிகக்கடுமையாகப் பாதிக்கப்படும்.

## அட்டவணை 1.10

## தெங்குப் புள்ளி விபரங்கள் 1979 — 1981

| விடயம் | கூறு | 1979 | 1980 | 1981 (அ) |
|---|---|---|---|---|
| 1. உற்பத்தி (ஆ) ... | ப.இ.காய்களில் | 2,393 | 2,026 | 2,258 |
| 1. 1 தேங்காய்த் துருவல் ... | ப.இ.காய்களில் (இ) | 272 | 217 | 276 |
| 1. 2 தேங்காயெண்ணெய் ... | ப.இ.காய்களில் (இ) | 803 | 500 | 605 |
| 1. 3 உலர்த்திய தேங்காய் (ஈ) ... | ப.இ.காய்களில் (இ) | 5 | 1 | 10 |
| 1. 4 உடன் காய் ஏற்றுமதி (உ) ... | ப.இ.காய்களில் | — | — | 2 |
| 1. 5 உள்நாட்டு நுகர்வு (ஊ) ... | ப.இ.காய்களில் | 1,302 | 1,326 | 1,349 |
| 2. சராசரி விலை | | | | |
| 2. 1 கொழும்பு ... | காய்க்கு ரூபாய் | 1.00 | 1.48 | 1.80 |
| 2. 2 ஏற்றுமதி க. ஏ. பெ. .. | காய்க்கு ரூபாய் | 2.40 | 3.13 | 2.45 |
| 3. வளமாக்கி வழங்கல் ... | '000 மெ. தொன் | 49.7 | 55.8 | 37.7 |
| 4. உற்பத்திச் செலவு ... | காய்க்கு ரூபாய் | 0.37 | 0.40 | 0.55 |
| 5. ஏற்றுமதி வருவாய்கள் ... | ரூ. ப. இ. | 1,699 | 1,234 | 1,438 |
| | (சிஎஉ. ப. இ.) | (84) | (57) | (63) |
| 5. 1 உள்ளீட்டு உற்பத்திகள் ... | ரூ. ப. இ. | 1,298 | 754 | 1,011 |
| | (சிஎஉ. ப. இ.) | (64) | (35) | (45) |
| 5. 2 ஏனைய உற்பத்திகள் ... | ரூ. ப. இ. | 401 | 480 | 427 |
| | (சிஎஉ. ப. இ.) | (20) | (22) | (19) |
| 6. மொ. உ. உ. இன் சதவீதமாக கூட்டப்பட்ட பெறுமதி (எ) ... | — | 4.9 | 5.1 | வி. இ. |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகம்.

(ஆ) மதிப்பீடு (உலர்த்திய தேங்காய் இருப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்களின் சீராக்கஞ் செய்யப்படுவதற்காக பகுப்பாய்வு மொத்த உற்பத்தியுடன் கூட்டப்படவில்லை.

(இ) தேங்காய்க்குச் சமனான ஒரு – 1 மெற். தொன் தேங்காய்த் துருவல் = 6,800 காய்கள்
– 1 மெற். தொன் எண்ணெய் = 8,000 காய்கள்
– 1 மெற். தொன் உலர்த்திய தேங்காய் = 4,925 காய்கள்

(ஈ) ஏற்றுமதிகள் மட்டும்.

(உ) நீண்டதொரு காலப்பகுதியின் கட்டுப்பாடுகளின் பின்னர் உடன் காய்களின் ஏற்றுமதி 1981 மேயில் மீளத் தொடங்கியது.

(ஊ) ஒரு ஆளுக்குரிய நுகர்வு ஆண்டுக்கு 90 காய்கள் என்ற அடிப்படையில் மதிப்பிடப்பட்டது.

(எ) உற்பத்தி செய்தலும் பதனிடலும் மட்டும்.

பயிர்ச்செய்கையின் கீழும், மீள்நடுகையின் கீழும் உள்ள மொத்தப் பரப்பளவு 3555 எக்டேயர்களாக விளங்கி முன்னைய ஆண்டைவிட 30 சதவீத அதிகரிப்பைக் காட்டியது; புதிதாகப் பயிரிடப்பட்ட பரப்பு 1980 இன் 2089 எக்டேயர்களி லிருந்து 1981 இல் 5259 எக்டேயர்களுக்கு பெருமளவில் அதிகரித்தது. ஏறத் தாள 15,000 எக்டேயர் தெங்கு நிலம் மீள்நன்னிலைப்படுத்தப்பட்டதுடன், இது 17 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பாகவும் இருந்தது. விரைவு படுத்தப் பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளின் காரணமாகவும் சாதகமற்ற காலநிலை களின் காரணமாகவும் கடந்த அண்மை ஆண்டுகளில் கணிசமானளவு தெங்கு நிலங்கள் கைவிடப்பட்டன. இவ்வாண்டுக்காலத்தில் தெங்குத் துணைதுறையின் பயிர்ச்செய்கையிலும் மீள்நன்னிலைப்படுத்தல் நடவடிக்கைகளிலும் ஏற்பட்ட அதிகரிப்பு இவ்விழப்புக்களை ஈடுசெய்வதற்கு எடுக்கப்பட்ட ஒரு பொருத்தமான நடவடிக்கையாகும்.

இவ்வாண்டில் உதவுதொகைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு 1981 ஆம் ஆண்டின் பயிர்ச்செய்கை நடவடிக்கைக்கு முக்கிய தூண்டுதலாக இருந்தது. 1981 இல் மீழ்ப் பயிர்ச்செய்கை மீள்நடுகை, புதிய பயிரிடுகை ஆகியவற்றிற்காகக் கொடுக்கப் பட்ட உதவுதொகைகள் முறையே ரூ. 137 இலட்சங்களாகவும், ரூ. 138 இலட் சங்களாகவும் விளங்கின. இதனை 1980 ஆம் ஆண்டின் முறையே ரூ. 37 இலட்சம், ரூ. 77 இலட்சங்களுடன் ஒப்பிடுகையில் கணிசமான அதிகரிப்பை எடுத்துக் காட்டின. 1981 ஆம் ஆண்டில் ரூ. 71 இலட்சமாக விளங்கிய மீள் நன்னிலைப்படுத் தலுக்கான உதவுதொகைக் கொடுப்பனவுகள் 1980 உடன் ஒப்பிடுகையில் 6 சத வீத அதிகரிப்பைக்காட்டின. நவெம்பரில் புதிய பயிர்ச்செய்கைக்கான உதவு தொகை எக்டேயர் ஒன்றிற்கு ரூ. 6793 இலிருந்து (ஏக்கரொன்றிற்கு ரூ. 2750) எக்டேயர் ஒன்றிற்கு ரூ. 8645 இற்கும் (ஏக்கரொன்றிற்கு ரூ. 3500) மீள் நடுகைக் கான உதவுதொகை எக்டேயர் ஒன்றிற்கு ரூ. 5558 இலிருந்து (ஏக்கரொன்றிற்கு ரூ. 2250) எக்டேயர் ஒன்றிற்கு ரூ. 7410 இற்கும் (ஏக்கரொன்றிற்கு ரூ. 3000) உயர்த்தப்பட்டது.

1981 ஆம் ஆண்டில் தெங்கு நிலங்களின் இடைநிலப்பயிர்ச்செய்கை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறைந்த மட்டத்தில் இருந்தது. 1980 ஆம் ஆண்டின் 573 எக்டேயர்களுடன் ஒப்பிடுகையில் 1981 இல் 355 எக்டேயர் தெங்கு நிலத்தில் மாத்திரமே இடைநிலப்பயிர் செய்யப்பட்டது. இவ்வீழ்ச்சி உதவு தொகைப்பயிர்க் களின் அனைத்து மூன்று வகைகளான கொக்கோ, கோப்பி, மிளகு ஆகியவற்றில் காணப்பட்டதெனினும் 66 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்த கொக்கோவில் இது கூடியளவிற்குக்காணப்பட்டது. நீர்அருமையாக இருக்கும் காலத்தில்கிடைக்கத்தக்க தாக இருக்கும் நீரைவேளாண்மையாளர்கள் அவர்களின் முதன்மையான பயிருக்கே பயன்படுத்துவதன்விளைவே இடைநிலப்பயிர்ச்செய்கையின் மோசமான நிலைக்குக் காரணமாகும். இடைநிலப் பயிர்ச்செய்கைக்கு கொடுக்கத்தக்க உதவு தொகைகள் இம்மூன்றுவகை உப உணவுப்பயிர்களுக்கும் 1981 நவெம்பரில்உயர்த்தப்பட்டன.

தேங்காய்களின் வழங்கலில் ஏற்பட்ட அதிகரிப்பு, தேங்காய்த்துருவலின் ஏற்றுமதித்தீர்வையில் ஏற்பட்ட குறைப்பு ஆகியவற்றின் விளைவாக 1981 ஆம் ஆண்டில் தேங்காய்த்துருவலின் உற்பத்தி 27 சதவீதத்தால் அதிகரித்தது ஆண்டின் பிற்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதி தாராளமாக்கலும் இதற்கு உதவியது. தேங்காயெண்ணெய் உற்பத்தியும் 21 சதவீதத்தால் அதிகரித்தது. இவ்வதிகரிப்பிற்கு தேங்காய்களின் ஏற்றுமதி செய்யத்தக்க மிகை கிடைக்கத்தக்கதாக இருந்தமையும் தேங்காயெண்ணெய்யின் மீதான ஏற்று மதித்தீர்வை அகற்றப்பட்டமைக்குப் பொறுப்பான முதன்மைக்காரணிகளாக இருந்தன. நீண்டகாலக் கட்டுப்பாடுகளின் பின்னர் தேங்காய்களின் ஏற்றுமதியும் 1981 மேயில் மீண்டும் தொடங்கியது.

1981 ஆம் ஆண்டுகாலத்தில் அரசு தேங்காய் ஏற்றுமதிகளின் கட்டுப்பாடுகளை அகற்றியமை, முன்னைய ஆண்டைக்காட்டிலும் கூடியளவிற்கு உற்பத்தியாளர்களுக்கே சார்பான கொள்கைப்பக்கம் சார்ந்ததை எடுத்துக்காட்டியது. ஏற்றுமதிகளை இடர்ப்படுத்தாமல் நுகர்வோர் தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதற்கு உற்பத்தியில் விரிவாக்கம் உறுதிப்படுத்தப்பட்டது. இவ்வாண்டில் அனைத்து தெங்கு உற்பத்திகளினதும் (கயிற்றுத் தும்பு தவிர) ஏற்றுமதிக்கட்டுப்பாடு நீக்கப்பட்டது. உலக சந்தையில் கயிற்றுத் தும்பின் சாதகமற்ற நிலைமையின் காரணமாக இதன் ஏற்றுமதி ஆகக்குறைந்த குறியீட்டு விலைத்திட்டத்தின் கீழேயே இருந்தது. 1,000 காய்களுக்கு ரூ. 1,450 அடிப்படைவிலை என்ற கருத்தில் மூன்று முதன்மை உற்பத்திகளுக்குமாக ஒருபுதிய படிப்படியாக உயர்ந்து செல்லும் ஏற்றுமதித்தீர்வை அளவு 1981 நவெம்பரில் அறிமுகம் செய்யப்பட்டது. ஏற்றுமதியிலிருந்து வரும் இலாபத்தில் பெரும் பங்கு உற்பத்தியாளர்களுக்குக் கிடைப்பதை உறுதிப்படுத்துவதற்காக இவ்வமைப்பு ஏற்படுத்தப்பட்டது.

### சிறு ஏற்றுமதிப் பயிர்வகைகள்

சிறு ஏற்றுமதிப் பயிர்கள்துறை பரவலான பயிர்ச் செய்கை அலகுகளாக ஒன்றில் ''கலப்புத் தோட்டங்கள்'' அல்லது ''வீட்டுத் தோட்டங்கள்'' என்ற பண்பைக் கொண்ட பிரிவுகளாக விளங்கின. இதனால் பயிர்ச்செய்கைபற்றியோ அல்லது வெவ்வேறு பயிர்வகையின் உற்பத்தி பற்றியோ நம்பத்தகுந்த தரவுகள் கிடைக்கக் கூடியதாக இருக்கவில்லை. இந்தச் சூழ்நிலைகளின் கீழ் இத்துறையில் ஏற்பட்ட முன்னேற்றங்களைத் தெளிவாக பகுப்பது சிக்கலானதாகும். எனினும் இப்பயிர்களின் மொத்த உற்பத்தியும் ஏற்றுமதி செய்யப்படுவதனால் ஏற்றுமதியின் அளவு உற்பத்திக்குப் பதிலாக பயன்படுத்தப்பட முடியும்.

ஏற்றுமதிகளின் அளவில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் மிளகு, கறுவா, புகையிலை, முந்திரிப்பருப்பு, வெற்றிலை ஆகியவற்றின் உற்பத்தி 1981 ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளமையை எடுத்துக் காட்டின. இவ்வுற்பத்திகளின் மிகச் சாதகமான ஏற்றுமதி விலைகள் இவ்வாண்டில் அவற்றின் சிறந்த உற்பத்திச் செயலாற்றத்திற்கு பெருமளவு காரணமாக இருந்தன. எனினும் கராம்பு, சாதிக்காய், சாதிக்காய்பூ, ஏலக்காய் ஆகியவற்றின் உற்பத்தியில் சிறிதளவு அதிகரிப்பு மாத்திரமே பதிவு செய்யப்பட்டது. கோப்பி, கொக்கோ, ஆகியவற்றின் ஏற்றுமதி அளவில் வீழ்ச்சி இருந்தபோதும் உற்பத்தியில் உள்ள வீழ்ச்சியைக் காட்டிலும் உள்நாட்டு நுகர்வில் காணப்பட்ட அதிகரிப்பு கூடுதலான காரணமாக இருந்தது.

1981 இல் சிறு ஏற்றுமதிப் பயிர்களின் புதிய நடுகை அதிகரித்துக் காணப்பட்டது. மிளகு, கராம்பு ஆகியவை புதிய நடுகையில் பெரிய அளவு அதிகரிப்பினைப் பதிவு செய்த வேளையில் கோப்பியின் புதிய நடுகை சென்ற ஆண்டினது மட்டத்திலேயே இருந்தது. இந்நோக்கத்திற்கான தற்போதைய உதவு தொகைத் திட்டம் புதிய நடுகையின் சிறந்த செயலாற்றத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றதுபோல் தோன்றுகிறது. முன்னைய ஆண்டறிக்கைகளில் எடுத்துக் காட்டப்பட்டவாறு அதிகரித்த ஏற்றுமதி வருவாய்கள் நாட்டின் ஏற்றுமதி அமைப்பைப் பன்முகப்படுத்துதல் ஆகிய வழிகளிலிருந்து நீண்டகாலமாகப் புறக்கணிக்கப்பட்ட இத்துறைகளிலிருந்தும் இலங்கையின் ஏற்றுமதிக்கு வழியமைக்கும் பொருளாதார வளர்ச்சிக்கு கணிசமான பலன்கள் பெறப்படவேண்டும். கோப்பி, மிளகு போன்ற பயிர்வகையின் தெங்குப் பயிர் நிலங்களில் கீழ் நிலப் பயிர்ச்செய்கையாக விரிவுபடுத்துவதற்குப் போதியளவு வாய்ப்புக் காணப்படு

கிறது என்பதில் ஐயமில்லை. *1981* நவெம்பர் மாதத்தில் தெங்கு நிலங்களில் கொக்கோ, கோப்பி, மிளகு ஆகிய கீழ்ப் பயிர்ச்செய்கைக்கான உதவுத் தொகைகள் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தன. இறப்பர் செய்கை நிலங்களில் கீழ்ப்பயிர்களாக விருத்தி செய்யப்படக் கூடிய பலவித சிறு ஏற்றுமதிப் பயிர் களும் காணப்படுகின்றன. இவ்வாற்றலானது, விரிவாக்கப் பணிகள் சந் தைப்படுத்தலை முன்னேற்றல், வேளாண்மையாளர்களின் பெரும் பிரிவினருக்கு அதிகரித்த அரச உதவிகள் கிடைப்பதற்கான வழிகள் ஆகியவற்றினூடாகப் பயன்படுத்தப்பட வேண்டும். இதுகாலவரை புறக்கணிக்கப்பட்ட (எட்டிலொரு ஏக்கரிலிருந்து அரை ஏக்கர் வரையான) சிறு பரப்புக்களை உள்ளடக்குகின்ற சிறு ஏற்றுமதியாளர்களின் பயிர்ச் செய்கைக்கான உதவித் திட்டத்தின் விரிவு, சிறு வேளாண்மையாளர்கள் தொடர்பான அரசஉதவித் திட்டத்திலிருந்து கூடிய நன்மை அடைவதற்கான வாய்ப்பு ஒரு வரவேற்கத்தக்க நடவடிக்கையாகக் கரு தப்பட வேண்டும்.

நெல்

குடித்தொகை மதிப்பு, புள்ளிவிபரவியல் திணைக்களம் *1981* ஆம் ஆண்டின் நெல் உற்பத்தியினை *22* இலட்சம் மெற்றிக் தொன்களாக மதிப்பிட்டுள்ளது. (*1,068* இலட்சம் புசல்நெல் அல்லது *16* இலட்சம் மெற்றிக் தொன் அரிசிக்குக் சமமானது) இது கடந்த ஆண்டின் உற்பத்திக்கு மேலாக *4.6* சதவீதமான அதிகரிப் பினைக்காட்டுகின்றது. *1980/81* பெரும்போகத்தில் நெல் உற்பத்தியானது *15* இலட்சம் மெற்றிக் தொன்களாக (*730* இலட்சம் புசல்கள்) மதிப்பிடப்பட்டு முன்னைய பெரும்போகக் காலத்தின் உற்பத்தியினைவிட *4.8*சதவீத அதிகரிப்பினைக் கொண்டிருந்தது. ஒரு பெரும்போகக் காலத்தில் ஈட்டப்பட்ட ஆகக்கூடிய உற்பத்தி மட்டம் இதுவாகும். எனினும் *1981* சிறு போகத்தில் உற்பத்தியானது *4* சதவீதம் அதிகரிப்பினைப்பெற்று *700,000* (*330* இலட்சம் புசல்கள்) மெற்றிக் தொன்களாக மதிப்பிடப்பட்டது.

பொதுவாக நோக்கின் *1981* ஆம் ஆண்டின் நன்கமைந்த உற்பத்தி செயலாற் றத்திற்கு திறந்த சந்தையில் நெல்லிற்கு தொடர்ந்தும் கிடைத்துவரும் கவர்ச்சி கரமான விலைகளும் பெரிய நீர்ப்பாசனத்திட்டங்களின் கீழும், மழைநீர்பெறும் பகுதிகளிலும் பயிர்செய்கைப் பரப்புக்களின் விரிவாக்கமுமே முதன்மைக் காரண ங்களாகும். அத்துடன் சிறந்த பயிர்ச்செய்கைமுறைகளை நடைமுறைப்படுத்துவதி லேற்பட்ட முன்னேற்றங்களும் உற்பத்தியின் மீது சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தன. ஒரு எக்டேயருக்கான சராசரி விளைச்சலானது *1980* ஆம் ஆண்டில் *2,928* கிலோக்கிறும்களில் இருந்து *1981* இல் *3,014* கிலோக்கிறும்களாக,*86* கிலோக்கிறும்களால் (ஏக்கரொன்றிற்கு*1.7* புசல்கள்) அதிகரித்தது.*1980*இல் ஒருஎக் டேயருக்கான சராசரி விளைவு *178* கிலோகிறும்களாக விளங்கியது. சராசரி விளைவில் ஏற்பட்ட குறைவான வளர்ச்சிக்கு குறிப்பிட்ட சில மாவட்டங்களில் நிலவிய வரட்சி நிலைகள் ஓரளவிற்கு காரணமாகவிருந்தன. அநுராதபுர மாவட் டத்தின் விளைச்சலில் கணிசமானளவு வீழ்ச்சி ஏற்பட்டு மொத்த உற்பத்தியில் அதன் பங்கானது *1981* இல் ஏறக்குறைய அரைவாசியாக்கப்பட்டது. பெரும்போக சிறு போக காலங்களில் ஏற்பட்டதாமதமான மழைவீழ்ச்சி சராசரி விளைச்சலில் ஏற் பட்டகுறைவான வளர்ச்சியில் தாக்கத்தை ஏற்படுத்தியது. கடந்த ஆண்டின் ஆண்டறிக்கையில் எடுத்துக்காட்டப்பட்டவாறு குறிப்பாக நாட்டின் பயிர்ச் செய்கைக்கு உகந்த நிலத்தின் பற்றுக்குறையை கருத்திற்கொண்டு நெற்றுறையில் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கு உயர்ந்தளவு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும். இத்தன்மை தேசிய பொருளாதார வளர்ச்சியில் பரவலான ஒரு தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாகவும் இருக்கும்.

## அட்டவணை 1.11
## நெல் புள்ளிவிபரங்கள் 1980 - 1981

| விடயம் | கூறு | 1980 | | | 1981 (அ) | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பெரும் போகம் | சிறு போகம் | மொத்தம் | பெரும் போகம் | சிறு போகம் | மொத்தம் |
| விதைக்கப்பட்ட மொத்தப் பரப்பு ... | '000 எக்டேயர் | 574 | 271 | 845 | 597 | 280 | 877 |
| வளமாக்கி வழங்கல்கள் [ஆ] ... | '000 மெ. தொன் | 92 | 53 | 145 | 111 | 54 | 165 |
| வழங்கப்பட்ட கொடுகடன் ... | ரூ. ப. இ. | 46 | 14 | 60 | 62 | 17 | 79 |
| திருந்திய விதைகளின் கீழான பயிர்ச்செய்கை ... | '000 எக்டேயர் | 487 | 196 | 683 | வி. கி. | வி. கி. | வி. கி. |
| அறுவடை செய்யப்பட்ட பரப்பளவு | '000 எக்டேயர் | 555 | 261 | 816 | 565 | 272 | 837 |
| எக்டேயருக்கான விளைச்சல் (இ) ... | கி. கிறும்கள் | 2,950 | 2,886 | 2,927 | 3,005 | 2,933 | 3,014 |
| தேறிய அறுவடை செய்யப்பட்ட பரப்பு ... | '000 மெ. தொன் | 496 | 232 | 728 | 501 | 239 | 740 |
| உற்பத்தி ... | 1000' எக்டேயர் | 1,453 | 680 | 2,133 | 1,523 | 707 | 2,230 |
| உ. வி. தி. கீழ் கொள்வனவு செய்யப்பட்டவை ... | '000 மெ. தொன் | 210.5 | 0.8 | 211.3 | 98.2 | 0.6 | 98.8 |
| கேள்விப் பத்திர திட்டத்தின் கீழான கொள்வனவுகள் (ஈ) | '000 மெ. தொன் | — | — | — | 28.3 | 0.5 | 28.8 |
| இறக்குமதிகள் (நெல்லிற்குச்சமன்) | '000 மெ. தொன் | 176 | 134 | 310 | 170 | 55 | 225 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகம்

(ஆ) பயிர்ச்செய்கை ஆண்டினதும் கலண்டர் ஆண்டினதும் வளமாக்கி வளங்கல்கள் அடிப்படையில் மாறுபட்டதாகும். கலண்டர் ஆண்டு சனவரி தொடக்கம் திசெம்பர் வரையாகும். பயிர்ச்செய்கை ஆண்டு பெரும்போகத்தையும் (செத்தெம்பர் / ஒற்றோபர்–மாச்சு/ஏப்பிறல்) சிறுபோகத்தையும (ஏப்பிறல்/மே-ஒகத்து/செத்தெம்பர்) உள்ளடக்கும்.

(இ) பெரும் போக சிறுபோகத்திற்கான எக்டேயர் ஒன்றின் விளைவு, சடிமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்திலிருந்து பெற்ற தரவுகளைக் கொண்டு கணக்கிடப் படுகிறது. அத்தரவுகள் பயிர் அறுவடை அளவீடுகள் அடிப்படையில் அமைந்தன வாகும். அதே வேளையில், மொத்த உற்பத்தியை அறுவடைசெய்யப்பட்ட தேறி நிலப்பரப்பால் எரிப்பதன் மூலம் மொத்த விளைவு கணக்சிடப்படுகிறது.

(ஈ) 1981 பெப்ருவரியில் கேள்விப்பத்திர திட்டம் தொடங்கப்பட்டது.

*1980/81 பெரும்போக காலத்தில் சராசரி விளைச்சலானது ஒரு எக்டேயருக்கு 3,005 கிலோக்கிறும்களாக (58.3 புசல்கள்) இருந்ததுடன் ஒரு பெரும்போக காலத்தில் பதிவு செய்யப்பட்ட ஆகக்கூடிய விளைச்சலாகவும் இருந்தது. முன்னைய பெரும்போகக் காலத்தில் பதிவு செய்யப்பட்ட விளைச்சலைக்காட்டிலும் 2 சதவீத அதிகரிப்பினைக் காட்டுகிறது. பெரும்போக காலத்தில் மழை வீழ்ச்சியுடைய பரப்புக்களில் ஒரு எக்டேயருக்கான சராசரி விளைச்சல் 9 சதவீதத்தால் கணிசமானளவு அதிகரித்துள்ளவேளையில், பெரிய நீர்ப்பாசனத்திட்டங்களுக்குக்கீழ் வரும் பரப்புக்கள் 2.5 சதவீதத்தால் அதிகரித்தன. எனினும் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்குக்கீழ்வரும் நிலங்களில் விளைச்சலானது 8 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.*

*1981 இல் விதைக்கப்பட்ட மொத்த நிலப்பரப்பு முன்னைய ஆண்டிலும் பார்க்க 32,122 எக்டேயர்கள் அல்லது 4 சதவீதத்தால் அதிகரித்தமைக்கு 1980/81 பெரும்போகத்தில் ஏற்பட்ட அதிகரிப்பே பெருமளவிற்கு காரணமாகும். இவ்வதிகரிப்பு பெரிய நீர்ப்பாசனத்திட்டங்களின் கீழுள்ள பரப்புக்களிலேயே முக்கியமாகச் செறிந்து காணப்பட்டது. விதைக்கப்பட்ட பரப்பிற்கும் அறுவடை செய்யப்பட்டதற்கும் இடையிலான வேறுபாடு, முன்னைய ஆண்டின் விதைக்கப்பட்ட மொத்தப் பரப்பான 29,000 எக்டேயர்கள் அல்லது 3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 40,121 எக்டேயர்கள் அல்லது 5 சதவீதமாக இருந்தது. இதனால் இவ்வாண்டுக் காலத்தில் ஏற்பட்ட பயிர் இழப்பு அதிகரித்திருக்கின்றது போல் தோன்றுகின்றது. குறிப்பிட்ட மாவட்டங்களில் நிலவிய சாதகமற்ற காலநிலை இவ்வதிகரிப்பிற்குக் காரணமாகும்.*

1981 பயிர்ச்செய்கை ஆண்டின் நெற்றுறைக்கான வளமாக்கி வழங்கல்கள் 19,675 மெற்றிக் தொன்களால் அதிகரித்து கடந்த ஆண்டினைவிட 14 சதவீதம் கொண்ட அதிகரிப்பை எடுத்துக்காட்டியது. பெரும்போக காலத்தில் 21 சதவீதத்தால் அதிகரித்த வழங்கல்கள் சிறுபோக காலத்தில் 2 சதவீதத்தால் சிறிதளவாக அதிகரித்தன. வளமாக்கியின் விலை 1981 இன் பெப்புருவரியிலும், செத்தெம்பரிலும் அதிகரிக்கப்பட்டது. 1981 பெப்புருவரியில் நடைமுறைக்கு வந்த அதிகரிப்பு 1981 சிறுபோகத்திற்கான வழங்கலை பாதகமானமுறையில் தாக்கியதுடன்இன்னோரிடத்தில் குறிப்பிட்டதுபோன்று ஆண்டுக்கான மொத்த வழங்கல்கள் 18 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன.

ஒரு புசல் நெல்லுக்கான உத்தரவாத விலையை அரசு 1981 பெப்புருவரியில் ரூ. 2.50 ஆலும் 1981 செத்தெம்பரில் ரூ. 5.00 ஆலும் மேலும் அதிகரித்தது. இது அதிகரித்த வளமாக்கி விலைகளின் பாதகமான தாக்கத்தைக் குறைக்கும் ஒரு முயற்சியாக இருந்தது. வளமாக்கிப் பயன்பாட்டில் பெருமளவில் தங்கிநிற்கும் தன்மை கொண்ட புதிய உயர் விளைவினைத்தரும் விதை வகைகள் பரந்தளவில் பயன்படுத்தப்பட்டு வருவதைக் கருத்திற் கொள்கையில், தொடர்ச்சியான கவர்ச்சியான திறந்த சந்தை விலைகள் பிரச்சனைகளை ஓரளவிற்கு மட்டுப்படுத்தக் கூடியதாக இருந்தபோதும் உயர்ந்து செல்லும் வளமாக்கிச் செலவுகள் எதிர்கால நெல் உற்பத்தியின் மீது பாதகமான தாக்கங்களை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கும். வேளாண்மை இரசாயனங்கள், இழுபொறி வாடகை, தொழிலாளர் போன்ற ஏனையஉள்ளீடுகளின் செலவும் அதிகரித்துள்ளது. அவ்வாறிருந்தபோதும் உத்தரவாத விலைக்கு மிகமேலாக இருந்த நெல்லின் திறந்த சந்தை விலைகள் (ஆண்டின் பல்வேறு காலங்களில் சராசரி திறந்த சந்தை விலைகள் ரூ. 65.00 இலிருந்து ரூ. 74.00 வரை வேறுபட்டன.) வேளாண்மையாளர்கள் நேர்க்கணிய உற்பத்தியாளர் இலாபங்களைப் பேண இயலச்செய்தன.

நெற்சந்தைப்படுத்தும் சபையினுல் மேற்கொள்ளப்பட்ட நெல் கொள்வனவு 1981 ஆம் ஆண்டில் 53 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து முன்னைய ஆண்டில் காணப்பட்ட வீழ்ச்சிப் போக்கின் தொடர்ச்சியை எடுத்துக்காட்டின. நெற்சந்தைப்படுத்தல் சபையினுல் மேற்கொள்ளப்பட்ட எல்லா கொள்வனவுகளும் பெரும்பாலும் ஆண்டின் முதலரைப்பகுதிக்கு மட்டுப்படுத்தப்பட்டன. 605 மெற்றிக் தொன்கள் (28,968 புசல்கள்) மட்டுமே ஆண்டின் பின்னரைப்பகுதியில் கொள்வனவு செய்யப்பட்டது. முன்னைய ஆண்டுகளைப் போன்றே இதன் கொள்வனவுகளில் பெருந்தொகை வரட்சிவலய மாவட்டங்களான அம்பாறை, அநுராதபுரம், பொலநறுவை மாவட்டங்களிலிருந்து மேற்கொள்ளப்பட்டது. ஈரவலய மாவட்டங்களிலிருந்தான நெற்கொள்வனவுகள் 14,226 மெற்றிக்தொன்களாக அல்லது மொத்தக் கொள்வனவில் 11 சதவீதமாக விளங்கியது. நெற்சந்தைப்படுத்தும் சபையின் கொள்வனவுகளின் வீழ்ச்சிப்போக்கு நெற்சந்தைப்படுத்துதலின் தனியார்துறையின் முதன்மைப்பங்கை எடுத்துக்காட்டியது. ஆண்டின் தொடக்கப்பகுதியில் தனியார் வர்த்தக மூலங்களிலிருந்து நெல்லைக்கவர்வதற்கு கேள்விப்பத்திரத்திட்டத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம் தமது கொள்வனவுகளை அதிகரிப்பதற்கு முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென நெற்சந்தைப்படுத்தும்சபை தீர்மானித்தது. இதனை விடப் போட்டி அடிப்படையில் அவசியமான பொழுது உத்தரவாத விலைக்கு மேலான விலைகளிலும் வேளாண்மையாளர்களிடமிருந்து நேரடியாகக் கொள்வனவுகளை மேற்கொள்வதற்கும் நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. நுகர்வோர் விலையில் விரைவான மேல் நோக்கிய அசைவுகளைத் தடுப்பதற்கு சந்தையில் உறுதியான அரிசி வழங்கலைப்பேண போதுமான தாங்கிருப்புக்களை வைத்திருப்பது இன்றியமையாதது என்ற நியதிகளில் கொள்வனவுகளை

அதிகரிப்பதற்காக முயற்சிகள் முதற்படியாக விளக்கப்படுகின்றன. எனினும் ஆண்டின் பின்னரைப்பகுதியில் நெல் சந்தைப்படுத்தும் சபையினுயில் தாங்கி யிருப்புக்கள் குறைந்த விலையில் வழங்கப்பட்டபோதும் திறந்த சந்தையில் அரிசியின் விலைகள் அதிகரித்தன. இவ்வாண்டுக்காலத்தில் அரிசியின் கிலோ வொன்றிற்கான் திறந்தசந்தைவிலை நிலையாகஅதிகரித்தது. 1981இன் முதலாண்டு பகுதியிலிருந்து இரண்டாம் அரைப்பகுதி வரையிலான அரிசியின் எல்லாத்தரங் களுக்குமான விலைகள் சராசரியாக 12 சதவீதத்தால் அதிகரித்தன. நெற்சந்தைப் படுத்தும் சபை தனியார்துறையுடன் போட்டியிடுவதற்கு முயற்சிகளை எடுக்கின்ற போதும் தற்போது வழங்கப்படும் நெல்லின் உயர்ந்த திறந்த சந்தை விலையில் 1981இல் கணிசமான கொள்வனவுகளை இதனுல் மேற்கொள்ளமுடியாமல் போனமை ஆச்சரியத்திற்குரியதல்ல. அவ்வாறிருப்பினும் ஆகக்குறைந்த உத்தரவாதவிலையின் காரணமாக உற்பத்தியாளர்கள் சந்தையில் சில பேரம்பேசுகின்ற வலுவைக் கொண் டிருப்பதற்கு நெற்சந்தைப் படுத்தும் சபை ஒரு கீழ்மட்ட விலைத் தொழிற்பாட்டாள ராக தனது பங்கைச் செலுத்தக்கூடியதாக இருந்தது. தற்போதிருக்கின்ற உத்தர வாத விலைத்திட்டம் மிகையான காலப்பகுதியில் விலையில் எந்த அமுக்கமும் இல்லா மையை உறுதிப்படுத்தியது.

நெல் சந்தைப்படுத்தும் சபையின் களஞ்சியப்படுத்தல் நெல்குற்றும் இயலளவு ஆகியவற்றின் குறைப்பயன்பாடு, சந்தையில் அண்மைய அபிவிருத் திகளின் காரணமாக தனியார்துறையில் களஞ்சியப்படுத்தல், நெல் குற்று தலுக்கான கூடிய கொள்ளளவில் ஏற்பட்ட அதிகரிக்கின்றகேள்வி ஆகியவற்றினை நோக்குகையில் இத்துறையில் பரந்திருக்கும் மூலவளங்களில் சிக்கனப்படுத்துதல் இன்றியமையாததுபோல் தோன்றுகிறது. சந்தை நிலைமைகள் மாறியதைக் கருத் திற்கொண்டு நெல் சந்தைப்படுத்தும்சபை அதன் அலுவலர்களைக் குறைப்பதற் கும் மறுசீரமைப்பதற்குமான திட்டத்தை ஏற்கனவே பொறுப்பேற்றுள்ளது. சில துணை உணவுப்பயிர்களின் கீழ்மட்ட விலைகளை பயனுறும் வகையில் பேணுவதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.

**சீனி**

இலங்கைச் சீனிக் கூட்டுத்தாபனத்தின் சீனி உற்பத்தி (உணவு ஆணையாளரிட மிருந்து தவிர்ந்த கொள்வனவு செய்யப்பட்ட கழிவிலிருந்து உற்பத்திசெய்யப்பட் டது.) 1981இல் 23,717 மெற்றிக் தொன்களாக மதிப்பிடப்பட்டு முன்னைய ஆண்டின் உற்பத்தியைக்காட்டிலும் 1 சதவீதங்கொண்ட சிறிதளவு அதிகரிப்பைக்காட்டியது, இங்குரான தொழிற்சாலையின் உற்பத்தி 7 சதவீத அதிகரிப்பைக்காட்டிய வேளை யில் கந்தளாய்த் தொழிற்சாலையின் உற்பத்தி 5 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

1981 ஆம் ஆண்டில் இங்குரான தொழிற்சாலையின் பயிரிடப்பட்டு அறுவடை செய்யப்பட்ட பரப்புகள் முறையே 5 சதவீதத்தாலும் 20 சதவீதத்தாலும் அதி கரித்தன. ஒரு எக்டேயருக்கான சராசரி விலையில் சிறிதளவு வீழ்ச்சி (1 சதவீதம்) இருந்தபோதும் அறுவடை செய்யப்பட்ட கரும்பின் அளவு 19 சதவீதத்தால் அதிகரித்தமை தனியார் துறையிலிருந்தான கரும்பின் கொள்வனவில் ஏற்பட்ட வீழ்ச்சியின் விளைவாகத் தோன்றிய உற்பத்தியின் மீதான பாதகமான தாக்கத்தை மேலதிகமாக ஈடு செய்தது.

இங்குரானயில் காணப்பட்ட முன்னேற்றங்களுக்கு மாறுக 1981 இல் கந்தளாய் தொழிற்சாலையின் பயிரிடப்பட்ட, அறுவடை செய்யப்பட்ட பரப்புக் கள் முறையே 17 சதவீதத்தாலும், 6 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்தன. ஒரு எக்டேயருக்கான சராசரி விளைவு ஏறத்தாழ 4 சதவீதத்தால் அதிகரித்தபோதும்

அறுவடை செய்யப்பட்ட கரும்பின் அளவு 2சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. மொத்தக் கரும்புக்கொள்வனவில் ஏறத்தாழ 3 சதவீதத்தை மட்டுமே உள்ளடக்கிய தனியார் துறையிலிருந்தான கரும்பின் கொள்வனவும் வீழ்ச்சியடைந்தது. தொழிற்சாலையில் உற்பத்தி வீழ்ச்சியடைந்தமைக்கு பதப்படுத்தலுக்கான கரும்பின் வழங்கல் குறைவடைந்தமையே முக்கிய காரணமாகும்.

1981 ஆம் ஆண்டில் சீனி மீட்சிவீதம் இரண்டு தொழிற்சாலைகளிலும் மோசமடைந்தமை முதன்மையான சீனி உற்பத்தி நாடுகளில் அடையப்பட்ட மீட்சி வீதங்களுக்கு மிகக்கீழேயே இரண்டு தொழிற்சாலைகளினதும் மீட்சிவீதங்கள் காணப்படுகின்றமையை நோக்குகையில் இது நலன்மிக்கதொரு அபிவிருத்தியாகத் தெரியவில்லை. இத்தொழிற்சாலைகளில் நிலத்தின், உற்பத்தியாக்கம், தொழிற்பாட்டு வினைத்திறமை ஆகியவற்றின் முன்னேற்றம், கூட்டுத்தாபனம், குறைந்த உற்பத்திச் செலவில் கூடிய சீனியை உற்பத்தி செய்வதை இயலச் செய்யும். கூட்டுத்தாபனம் அதன் மூலதனத்தை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களில் நிதியிடுவதை இயலச் செய்வதற்காக இவ்வாண்டில் சீனியின் உள்நாட்டுத் தயாரிப்புக்களின் மீதான மொத்த விற்பனைவுவரி 35 சதவீதத்திலிருந்து 25 சதவீதத்திற்கும் மீண்டும் 15 சதவீதத்திற்கும் குறைக்கப்பட்டது.

**சிறு உணவுப்பயிர்கள்**

சிறு உணவுப்பயிர்களின் உற்பத்தி 1981 ஆம் ஆண்டில் கணிசமான அளவில் அதிகரித்தது. உருளைக்கிழங்கு தவிர்ந்த அனைத்து சிறு உணவுப்பயிர்களினதும் பயிர்ச் செய்கையின் கீழான பரப்பளவில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அளவு அதிகரிப்பே உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு காரணமாகும்.

1981 ஆம் ஆண்டில் பதிலீடுகளின் உயர்ந்த விலைகள் நடைமுறையில் உள்ள கீழ்மட்ட விலைத்திட்டம், சிறந்த தாங்கிருப்பு முகாமை ஆகியன உற்பத்தியாளர் விலைகளின் முன்னேற்றத்திற்கு உதவின. உற்பத்தியாளர் விலைகளில் ஏற்பட்ட முன்னேற்றமே 1981 ஆம் ஆண்டின் உற்பத்தியை பாதித்த முக்கிய காரணியாகும். எனினும் குறிப்பிட்ட இடங்களில் குறைவான மழை வீழ்ச்சி அல்லது காலங்கடந்த மழை வீழ்ச்சி ஆகியன நெல்லிலிருந்து சிறு உணவுப் பயிர்களுக்கு மாற்றுவதற்கு வேளாண்மையாளர்களைத் தூண்டின. நீர்ப்பயன்பாட்டில் சிக்கனத்தை மேற்கொள்ளும் நோக்கில் மகாவலியின் ''எச்'' பிரிவில் உள்ள வேளாண்மையாளர்களை சிறு உணவுப் பயிர்களுக்கு இணங்க வைக்கும் பொருட்டு ஒன்றிணைந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் பயிர் செய்யப்பட்ட பரப்பளவில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பின் தாக்கம், உற்பத்தியின் மீது முழுமையாக உணரப்படாததற்கு இத்துறைக்கான வளமாக்கி வழங்கலில் ஏற்பட்ட 37 சதவீதமான வீழ்ச்சியே ஓரளவு காரணமாகும். சிறு உணவுப் பயிர்துறையின் அபிவிருத்தி சாதகமான உற்பத்தியாளர் இலாபங்களிலேயே பெருமளவிற்கு தங்கி இருந்தது என்பதை 1981 ஆம் ஆண்டின் அனுபவம் தெளிவாக எடுத்துக் காட்டியது. அத்துடன் நிறுவனக் கொடுகடனின் அதிகரித்த கிடைப்பனவு, விரிவாக்கல், சந்தைப்படுத்தல் வசதிகளின் போதுமான முன்னேற்றங்கள் ஆகியன இத்துறையில் தொடர்ந்த வளர்ச்சியை அடையத் தேவைப்படுகின்றன.

வளமாக்கி

1981 ஆம் ஆண்டு காலத்தில் மொத்த வளமாக்கி வழங்கல்கள் ஏறத்தாழ 17 சதவீதத்தால் கணிசமாக வீழ்ச்சி அடைந்தன. வழங்கலில் காணப்பட்ட இவ்வீழ்ச்சி அனைத்து முதன்மைப் பயிர்களிலும் அவதானிக்கப்பட்டது. ஆண்டு (சனவரி, திசெம்பர்) அடிப்படையில் நெல் துணைத்துறை 18 சதவீதம் கொண்ட பெருமளவு வீழ்ச்சியைக் காட்டியது. தேயிலைத் துணைத் துறைக்கான வழங்கல் 6 சதவீதத்தால் வீழ்ச்சி அடைந்தது. தெங்கு, இறப்பர், துணைத் துறைகளுக்கான வழங்கல்களும் முறையே 32 சதவீதத்தாலும் 24 சதவீதத்தாலும் வீழ்ச்சி அடைந்தன. சிறு உணவுப் பயிர்கள், சிறு ஏற்றுமதிப் பயிர்கள் துணைத் துறைகளின் நிலைமையும் இதே போன்று திருப்தி அற்றனவாக இருந்தன.

1981 இல் வளமாக்கி வழங்கல்கள் மிகக்குறிப்பிடத்தக்க அளவில் வீழ்ச்சி அடைந்தமைக்கு 1981 [1] இன் பெப்புருவரியிலும், செத்தெம்பரிலும் நடைமுறைக்கு வந்த விலை அதிகரிப்புக்களே முக்கிய காரணமாகும். 1981 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தின் தொடக்க ஒதுக்கீடு ரூபா. 10000 இலட்சத்திற்குள் மொத்த வளமாக்கி உதவு தொகை செலவை உள்ளடக்குவதற்கு விலை அதிகரிப்புக்கள் இன்றி அமையாதனவாக இருந்தன. சிறு நில உடைமைகள் பெருந்தொகையாக உள்ள துணைத் துறைகளில் விலை அதிகரிப்புக்கள் மிகக்கூடிய பாதகமான விளைவை ஏற்படுத்தின. விலை அதிகரிப்புகளை எதிர்பார்த்து 1980 இறுதிப் பகுதியில் சில்லறை விற்பனை நிலையங்களின் இருப்புக்கள் குவிக்கப்பட்டமையும் வளமாக்கிப் பாவனைகளில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு காரணமாக இருந்திருக்கக் கூடும் என்பது சாத்தியமானதே.

அட்டவணை 1.12

பயிர்களின்படி வளமாக்கி வழங்கல் 1978 — 1981

'000 மெற்றிக் தொன்கள்

| பயிர் | 1978 | 1979 | 1980 | 1981 (அ) |
|---|---|---|---|---|
| நெல் ... ... | 136.1 | 130.4 | 190.0 | 155.6 |
| தேயிலை ... ... | 115.5 | 105.2 | 109.9 | 103.3 |
| இறப்பர் ... ... | 20.9 | 23.2 | 22.0 | 16.8 |
| தெங்கு ... ... | 42.6 | 49.6 | 55.8 | 37.7 |
| சிறு உணவுப் பயிர்கள் ... | — | — | — | 14.8 |
| சிறு எற்றுமதி பயிர்கள் ... | — | — | — | 3.2 |
| ஏனையவை ... ... | 64.9 (ஆ) | 64.0 (ஆ) | 62.0 (ஆ) | 34.9 |
| மொத்தம் ... | 380.0 | 372.4 | 439.7 | 366.3 |

மூலம்: இலங்கை வளமாக்கிக் கூட்டுத்தாபனம்
தேசிய வளமாக்கிச் செயலகம்

(அ) தற்காலிகம்.

(ஆ) சிறு உணவுப் பயிர்கள் சிறு எற்றுமதி பயிர் துணைத் துறைகள் ஆகியவற்றுக்கான வளமாக்கி வழங்கல்களை உள்ளடக்கும்.

வளமாக்கியின் சில்லறை விற்பனையாளர்களின் வர்த்தக இலாபங்களின் அளவுகளில் ஒரு மோசமான நிலைமை 1981 இல் ஏற்பட்டது. அத்துடன் செயற்படு சில்லறை விற்பனையாளர்களின் எண்ணிக்கையையும் இவ்வாண்டில் பெருமளவிற்குக் குறைவடைந்திருப்பதாக மதிப்பிடப்பட்டது. இந்நிலைமைகள் ஐயமின்றி 1981 ஆம் ஆண்டின் வளமாக்கி வழங்கலின் மீது ஒரு பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தின. வேளாண்மையாளர்களுடன் நெருங்கிய தொடர்புள்ள சில்லறை விற்பனையாளர்கள்போதுமானவளங்களையோ அல்லதுவளமாக்கியின்சந்தை

(1) விலை அதிகரிப்புக்களை எதிர்பார்த்து 1980 இன் இறுதிப்பகுதியில் சில்லறை விற்பனை நிலையங்களில் இருப்புக்கள் குவிக்கப்பட்டமையும் வளமாக்கிப்பாவனையில் எற்பட்ட வீழ்ச்சி காரணமாக இருந்திருக்கக்கூடும் என்பது சாத்தியமானதே.

படுத்தல் செயற்படுவதற்குப் போதுமான ஊக்குவிப்புக்களையோ கொண்டிருக்க வில்லை. மொத்த விற்பனை மட்டத்தில் வளமாக்கிப் பங்கீடுகளின் சிக்கனமான ஒழுங்காக்கத்திலிருந்து முழுமையான நன்மைகளை அடைவதற்கு இக்குறைபாடு நீக்கப்படவேண்டும். சரியான நேரத்தில் சில்லறை விற்பனை களஞ்சியங்களில் கணிசமான அளவுகளில் வளமாக்கி கிடைக்கத்தக்கதாக இருந்தமை வேளாண்மை யாளர்களின் வளமாக்கிப் பயன்பாட்டில் கணிசமான பாதிப்பை ஏற்படுத்தியது. அத்துடன் அதிகரிக்கின்ற இறக்குமதிச் செலவில் வளமாக்கியின் பெரும் பங்கினை கருத்திற்கொண்டு அனைத்துப்பயிர் துறைகளிலும் வளமாக்கியின் திறமையான பயன்பாடு கூடியளவிற்கு வற்புறுத்தப்படவேண்டும்.

அரசுக்குச் சொந்தமான யூரியா தொழிற்சாலை 1981 செத்தெம்பர் வரையில் உற்பத்தியிலிருந்தது. எனினும் இவ்வாண்டில் தொழிற்சாலை பல பிரச்சினைகளை எதிர்நோக்கியது. எடுத்துக்காட்டாக முக்கிய உள்ளீடான நப்தாவின் விலை இவ் வாண்டில் பெருமளவிற்கு அதிகரித்து உற்பத்திச் செலவை அதிகரித்ததுடன் தொழிற்சாலையின் நிதியாற்றலையும் குறைத்தது. தொழிற்படுமூலதனத்தின் பற்றுக்குறை காரணமாக உற்பத்தி நிகழ்ச்சித்திட்டமும் தடைகளுக்குட்பட வேண்டியிருந்ததுடன் 1981 ஒற்றோபரில் தொழிற்சாலை தற்காலிகமாக மூடப் பட்டது. எனினும் 1981 திசெம்பர் பிற்பகுதியில் உற்பத்தி மீளத்தொடங்கப் பட்டது. ஆண்டின் இறுதியில் தொழிற்சாலையின் நிதி ஆற்றல் அரசினால் மீளப் பரீட்சிக்கப்பட்டது.

**விரைவுபடுத்தப்பட்ட மகாவலி நிகழ்ச்சித்திட்டம்**

1981 ஆம் ஆண்டில் விரைவுபடுத்தப்பட்டமகாவலி நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்படுத்தலில் குறிப்பிடத்தக்க செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. அள வீடுகளின் செலவு, ஆய்வும் திட்டமிடலும் ஆகியவற்றை உள்ளடக்கி நிகழ்ச்சித் திட்டத்தின் மீது ஏற்பட்ட செலவினம் 1981 இறுதியில் ஏறத்தாழ ரூ. 78,240 இலட்சங்களாக இருந்ததுடன் இதில் 36,360இலட்சம் (46சதவீதம்) 1981ஆம் ஆண்டில் ஏற்பட்டதாகும்.

விக்டோரியா செயற்றிட்டம் 7,300 இலட்சம் கனமீற்றர் இயலளவைக் கொண்ட நீர்த்தேக்கம், 5,400 மீற்றர்கள் நீளத்தைக் கொண்ட குடைவழி நிறு வப்பட்ட இயலளவான 210 மெக வாட்டுக்களைக் கொண்ட மின்வலு நிலையம் ஆகியவற்றைக் கொண்டிருக்கிறது. கட்டுமானத்திற்கான அனைத்து ஒப்பந்தங் களும் வழங்கப்பட்டிருப்பதுடன் செயற்றிட்டத்தின் கட்டுமான வேலையில் திருப்தி கரமான செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன. ஏறத்தாழ 2,400 மீற்றர்கள் கொண்ட குடைவழி அகழ்வு 1981இல் முற்றுப்பெற்றது. இத்திட்டம் முற்றுப் பெறும்பொழுது மகாவலித்திட்டத்தின் முறை "பி" முறை "சி"யில் உள்ள 45,000 எக்டேயர்களுக்கு நீர் வழங்கும். தரவுகள் ஒன்று சேர்க்கப்பட்டதன் அடிப்படையில் செயற்றிட்டத்தின் மீது ஏற்கனவே செலவு செய்யப்பட்ட ரூ. 18,890 இலட்சங்கொண்ட மொத்தத்தில் ரூ. 9,690 இலட்சம் (அல்லது 51 சதவீதம்) கொண்டதொகை 1981 ஆம் ஆண்டு செலவு செய்யப்பட்டிருப்பது அவதானிக்கப் பட்டது. இச்செயற்றிட்டம் 1984 இல் முற்றுப்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கொத்மலை செயற்றிட்டம் ஒரு நீர்த்தேக்கத்தையும், ஆண்டொன்றிற்கு 67 மெகாவாட்டுக்கள் இயலளவைக்கொண்ட இரண்டு கூறுகளைக் கொண்ட நிலக்கீழ் மின்வலு நிலையத்தையும் உள்ளடக்குகின்றது. வழிப்பாதைகளமைத்தல் தங்குமிடக் கட்டுமானம் ஆகியவற்றை உள்ளடக்கிய தொடக்கவேலைகள் முற்றுப் பெறும் நிலையிலுள்ளன. நிலக்கீழ் வலு நிலையம், குடைவழி அகழ்வு ஆகியன

முன்னேற்றமடைந்துள்ளன. 1981 இன் இறுதிவரை 4,080 மீற்றர் குடைவழி அகழப்பட்டிருக்கிறது. அணையின் அத்திவாரத்திற்கான அகழ்வும் நீருக்கடியில் நீர்புகாவண்ணம் அமைக்கப்படும் அணை அமைப்பு வேலைகளும் தொடங்கிய வேளையில் திருப்புக் குடைவழியொன்றும் முற்றுப்பெறும் நிலையிலிருக்கிறது. 1981 முடிவில் செயற்திட்டத்தின் மீது ஏற்பட்ட மொத்தச்செலவு ரூ. 21,060 இலட்சங்களாக விளங்கியதுடன் இதில் ரூ. 9,740 இலட்சம் (46 சதவீதம்) 1981 இல் ஏற்பட்டது. இச்செயற்றிட்டம் 1985 இன் முற்பகுதியில் முற்றுப்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## அட்டவணை 1.13

### விரைவுப்படுத்தப்பட்ட மகாவலி நிகழ்ச்சித் திட்டம் - செலவு மதிப்பீடுகள்

ரூபா பத்து இலட்சங்களில்

| செயற்றிட்டம் | 1981இற்கான வரவு செலவுத் திட்ட செலவினம் | | | 1981 இற்கான உண்மைச் செலவினம் (அ) | 1981 இறுதி வரையான ஒன்றுசேர்ந்த செலவினம் (அ) |
|---|---|---|---|---|---|
| | தற்காலிகம் | துணை ஒதுக்குகள் | மொத்தம் | | |
| 1. விக்டோரியா நீர்த்தேக்கம் ... | 1,017 | — | 1,017 | 969 | 1,889 |
| 2. கொத்மலை நீர்த்தேக்கம் ... | 389 | 750 | 1,139 | 974 | 2,106 |
| 3. இரந்தெனிகலை நீர்த்தேக்கம் ... | 18 | — | 18 | 17 | 76 |
| 4. மதுறு ஓயாவும் இணைப்புக் குடைவழியும் ... | 534 | — | 534 | 643 | 1,079 |
| 5. மினிப்பே அணைக்கட்டு மாற்று வடிகால் கால்வாய் செயற்கூறு ... | 336 | — | 336 | 335 | 500 |
| 6. நீர்ப்பாசன முறை 'பி' ... | 90 | — | 90 | 90 | 201 |
| 7. நீர்ப்பாசன முறை 'சி' ... | 183 | — | 183 | 180 | 316 |
| 8. செயலெளிமைவாய்ந்த ஆய்வுகள் | 64 | — | 64 | 62 | 62 |
| 9. நிலை I ... | 13 | — | 13 | 12 | 470 |
| 10. நிலை II ... | 356 | — | 356 | 354 | 1,125 |
| மொத்தம் | 3,000 | 750 | 3,750 | 3,636 | 7,824 |

மூலம்; இலங்கை மகாவலி அபிவிருத்திச் சபை

(அ) தற்காலிகம்

மதுறுஓயா செயற்றிட்டத்தின் கட்டுமானத்திலும் திருப்திகரமான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. 1981 ஆம் ஆண்டுவரை ஏற்பட்ட செலவு ரூ. 10,790 இலட்சங்களாக விளங்கியதுடன் ரூ. 6,430 இலட்சம் (60 சதவீதம்) கொண்டதொகை 1981 ஆம் ஆண்டில் செலவழிக்கப்பட்டது. இச்செயற்றிட்டம் 1983 ஏப்பிரல் மாதத்தில் முற்றுப் பெறுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

மகாவலிப்பரப்பின் கீழ் நீரோட்ட நீர்ப்பாசன முறையின் அபிவிருத்தியில் குறிப்பிடத்தக்க செயற்பாடுகள் அடையப்பட்டன. 1981 ஆம் ஆண்டுக் காலத்தில் இச்செயற்திட்டத்தின் மீது ஏறத்தாழ ரூ. 9,710 இலட்சம் செலவு செய்யப்பட்டது. 1981 இல் முறை ''எச்'' பிரிவில் ஏறத்தாழ 27,586 எக்டேயர் பரப்பளவில் நெல்லும் 2,521 எக்டேயர்களில் ஏனைய பயிர்களும் பயிரிடப்பட்டன. கிடைக்கத்தக்க தரவுகளின்படி 1981 திசெம்பர் வரையில் ஏறத்தாழ 22,000 குடும்பங்கள் கலாவெவப்பகுதியில் ('எச்' பிரிவு) குடியேற்றப்பட்டிருப்பதுடன் முதல் 1,478 குடும்பங்கள் 1981 ஆம் ஆண்டில் குடியேற்றப்பட்டன.

**மீனும் கால்நடையும்**

கடற்றொழில் அமைச்சு 1981 இல் மீன் உற்பத்தி 205,232 மெற்றிக் தொன்களெனத் தற்காலிகமாக மதிப்பிடப்பட்டிருப்பதுடன் முன்னைய ஆண்டின் உற்பத்தியைவிட 9 சதவீத அதிகரிப்பையும் கொண்டிருந்தது. இவ்வதிகரிப்பு கரையோர உள்நாட்டு மீன்பிடித்துணைத்துறைகளில் ஏற்பட்ட முன்னேற்றங்களின் விளைவாகும். கரையோரத்துணைத்துறையின் உற்பத்தி 6 சதவீதத்தால் அதிகரித்த வேளையில் உள்நாட்டுத்துணைத்துறையின் உற்பத்தி 40 சதவீதத்தால் அதிகரித்தது. ஒப்பீட்டடிப்படையில் உள்நாட்டு மீன்பிடி குறைந்த சக்தியைப்பாவிப்பது, அலகொன்றிற்கான உற்பத்திச் செலவு குறைவாக இருத்தல் ஆகியவற்றின் காரணமாக உள்நாட்டு மீன் உற்பத்தியின் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஊக்கமளிப்பதாகவுள்ளது. கரையோரத்துணைதுறை உற்பத்தி அதிகரிப்புக்கு முன்னைய ஆண்டுக் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட குறிப்பிடத்தக்க எண்ணிக்கை கொண்ட புதிய மரக்கலங்கள் பெருமளவு காரணமாக விளங்கின. உள்நாட்டு மரக்கலங்கள் பொறிமயப்படுத்தப்பட்டமை, பொறிகள் படகுகள் திருத்துவதற்கான வசதிகள் கிடைக்கத்தக்கதாக இருந்தமை ஆகியன உற்பத்திமீது சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தன.

புதிய படகுகளின்வழங்கல்களுக்கும், பொறிமயமாக்கலுக்குமான உதவுதொகைக் கொடுப்பனவுகள் 1980 ஆம் ஆண்டில் ரூ. 590 இலட்சங்களிலிருந்து 1981 இல் ரூ. 300 இலட்சங்களுக்கு வீழ்ச்சியடைந்தன. தகைமைபெற்ற கடற்றொழிலாளர்களில் அதிகமானோர் முன்னைய ஆண்டுகளிலேயே இத்திட்டத்திலிருந்தும் நன்மைகளைப் பெற்றிருப்பதனால் இது ஏற்பட்டிருக்கலாம்.

குடிமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் தற்காலிக மதிப்பீடுகளின்படி 1981 இல் பால் உற்பத்தி (எருமைப்பால் உட்பட) 3,090 இலட்சம் இலிற்றர்களாக அமைந்து 1980 ஆம் ஆண்டினதைவிட 9 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்தது. தேசிய பாற்சபை 1981 இல் 583 இலட்சம் இலிற்றர் பாலைச் சேகரித்து, கடந்த ஆண்டைக் காட்டிலும் 6 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப்பதிவு செய்தது.

1981 ஆம் ஆண்டின் முட்டை உற்பத்தி 5,590 இலட்சங்களெனக் குடிமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் தற்காலிகமாக மதிப்பிடப்பட்டு முன்னைய ஆண்டினைவிட 3 சதவீதங்கொண்ட சிறிதளவு அதிகரிப்பைக்காட்டியது.

**கிராமியக் கொடுகடன்**

அனைத்தையும் உள்ளடக்கிய கொடுகடன் திட்டம், கிராமிய வங்கித்திட்டம் வேளாண்மைப் பணிநிலையங்களிலுள்ள இலங்கை வங்கியின் துணை அலுவலகங்கள் ஆகியவற்றின் கீழ் வழங்கப்பட்ட கொடுகடன் தொகை 40 சதவீதத்தால் 1981 இல் ரூ. 1,574 இலட்சங்களுக்கு அதிகரித்தது. 1980 ஆம் ஆண்டில் நிலவிய 6 சதவீத வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் பகிர்ந்தளிக்கப்பட்ட கொடுகடனின் அளவில் ஏற்பட்ட இவ்வதிகரிப்பு சாதகமானதாக இருந்தது.

மக்கள் வங்கி கிராமிய வங்கிகளுடன் இணைந்து 1980ஆம் ஆண்டின் ரூ. 589 இலட்சம் அல்லது 52 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் வழங்கப்பட்ட கடன்களில் ரூ. 909 இலட்சத்தை அல்லது 58 சதவீதத்தை வழங்கியதன் மூலம் கிராமியத்துறைக்கான முக்கிய கடன் வழங்கல் நிறுவனமாகத் தொடர்ந்திருந்தது. மொத்தமாக வழங்கப்பட்ட கடன்களில் 37 சதவீதத்திற்கு வகைகூறிய கிராமியவங்கிகள் இதில் அவைதொடர்பான பங்குகளில் சிறிதளவான அதிகரிப்பையும் உண்மை நியதிகளில் ரூ. 188 இலட்ச அதிகரிப்பையும் எடுத்துக்காட்டியது. இலங்கை வங்கி துணை அலுவலகங்கள் ஏறத்தாழ ரூ. 386 இலட்சங்களை அல்லது 25 சதவீதத்தை வழங்கி உண்மை நியதிகளிலும் ஒப்பீட்டு நியதிகளிலும் ஒரு

வீழ்ச்சியை எடுத்துக்காட்டியது. 1981 ஆம் ஆண்டில் அட்டன் நெசனல் வங்கி ரூ. 279இலட்சங்களை அல்லது 18சதவீதத்தை வழங்கியது. அனைத்தையும் உள்ளடக்கிய கிராமக் கொடுகடன் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட வேளாண்மைக்கடன்களின் விபரங்கள் புள்ளிவிபரப்பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளன.

சிறிய அளவு கைத்தொழில்கள், கடன்மீளல், வீட்டுக்குமின்னூட்டலும் நீர் வழங்கலும், வர்த்தகம் போன்ற நடவடிக்கைகளுக்கான கடன்வழங்கல் 1981ஆம் ஆண்டுப் பகுதியில் அதிகரித்திருக்கின்றன. அத்துடன் நுகர்வு நோக்கங்களுக்காக வழங்கப்பட்டகடன்கள் 94சதவீதத்தால் அதிகரித்தன. எனினும் விலங்கு வளர்ப்பு மூலதனக்கருவிகள் கொள்வனவு ஆகியவற்றிற்கான கடன்கள் முறையே 19 சதவீதத்தாலும் 63 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்தன.

1981 ஆம் ஆண்டில் வங்கித்தொழிற்துறையின் கிராமியக்கடன் வழங்கல் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தபோதும் இவ்வாண்டுக்காலத்தில் கடன் மீளப்பெறல் தொடர்பாக எந்த முன்னேற்றமும் காணப்படவில்லை. புதிய வேளாண்மைக்கொடுக்கடன் திட்டம், அதைத்தொடர்ந்து அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக்கொடுக்கடன்திட்டம் ஆகியவற்றின் கீழ் 1967 ஆம் ஆண்டிலிருந்து 1981 சிறுபோகம் வரையில் நெற்பயிர்ச்செய்கைக்காக வழங்கப்பட்ட ரூ.12,890 இலட்சங்கொண்ட மொத்தத்தொகையில் ரூ. 6,370 இலட்சங்கள் மட்டுமே மீளப்பெறப்பட்டது. ஏனைய பயிர்ச்செய்கைக்காக வழங்கப்பட்ட கடன்களின் நிலைமையும் இதைப்போன்றே மொத்தக்கடன் ரூ. 4,120 இலட்சத்தில் ரூ. 2,010 இலட்சம் மட்டுமே மீளப்பெறப்பட்டது. நெல்,ஏனைய பயிர்களுக்கானசெலுத்தத்தவறியவீதம் 51 சதவீதமாக உயர்வானதாக இருந்தது. இவ்வெண்தொகைகள் எடுத்துக்காட்டுகின்றபடி மீளப்பெறல்களை உயர்த்துவதற்கு முயற்சிகளைத் தொடங்குவது மிக அவசியமாகும்.

அறிக்கையின் இன்னோரிடத்தில் குறிப்பிடப்பட்ட புதிதாக ஏற்படுத்தப்பட்ட கிராமியக்கொடுகடன் மதியுரைச்சபை செலுத்தத்தவறிய வேளாண்மையாளர்களை மீள தகைமையுடையவர்களாக்குவதற்கும் அவர்களிடமிருந்து வரவேண்டிய கடந்த காலத்தொகைகளை மீளப்பெறுவதற்குமான திட்டத்தை ஏற்கனவே தொடங்கிவிட்டது. உள்ளீடுகளின் செலவில் குறிப்பாக வளமாக்கியில் ஏற்பட்ட விலையேற்றங்களுடன் நோக்குகையில் கொடுகடன் ஏற்பாடு அதிகரித்த முக்கியத்துவத்தை பெறுகின்றது. செலுத்தத்தவறிய தொகையின் அளவு,அதைத்தொடர்ந்து கடன் பெறுவதற்குத்தகைமையான வேளாண்மையாளர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட குறைவு ஆகியன, கடந்த சில ஆண்டுகளில் நெல் உற்பத்தியின் அதிகரிப்பில் ஏற்பட்ட விரைவை தொடர்ந்தும் நிலைப்படுத்துவதற்கு பாரதூரமான தடையாக விளங்கின. வழங்கப்பட்ட தொகை, பணிகள் அளிக்கப்பட்ட சிறு உடைமைகளின் எண்ணிக்கை, இரண்டினதும் நியதிகளில் கிராமியக் கொடுக்கடனுக்கான மொத்தக் கேள்வியில் ஒரு சிறு விகிதத் தேவையை மட்டுமே ஈடுசெய்த அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுக்கடன் திட்டத்தினை வீழ்ச்சியடைகின்ற மீளளிப்பு வீதங்களை முன்னேற்றும் நடவடிக்கைகளுடன் இணைந்து விரிவடையச் செய்வதற்கு ஒருங்கிணைந்த முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

## அட்டவணை 1.14

### கிராமக் கொடுகடன் (அ) 1980 — 1981

ரூ. ப. இலட்சம்

| நோக்கம் | மக்கள் வங்கி (ஆ) | | கிராம வங்கிகள் | | இலங்கை வங்கி உப அலுவலகங்கள் (இ) | | அட்டன் நசனல் வங்கி | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1980 | 1981* | 1980 | 1981* | 1980 | 1981* | 1980 | 1981* | 1980** | 1981* |
| 1. பயிர்ச்செய்கை ... | 19.6 | 32.8 | 4.4 | 4.1 | 21.0 | 22.6 | 4.7 | 22.0 | 49.7 | 81.5 |
| 1.1 நெல் ... | (16.0) | (27.4) | ( 1.1 ) | ( 2.0 ) | ( 13.5 ) | ( 16.1 ) | ( 4.7 ) | ( 22.0 ) | ( 35.3 ) | ( 67.5 ) |
| 1.2 சிறு உணவு பயிர்கள் ... | ( 3.4) | ( 5.4) | ( 3.3 ) | ( 2.1 ) | ( 7.5 ) | ( 6.5 ) | ( — ) | ( — ) | ( 14.2 ) | ( 14.0 ) |
| 1.3 கரும்பும் பருத்தியும் ... | ( 0.2) | ( — ) | ( — ) | ( — ) | ( — ) | ( — ) | ( — ) | ( — ) | ( 0.2 ) | ( — ) |
| 2. கால்நடை வளர்ப்பு ... | | | 2.1 | 2.0 | 0.8 | 0.2 | 0.7 | 0.7 | 3.6 | 2.9 |
| 3. சிறு கைத்தொழில் ... | | | 2.1 | 2.4 | 0.4 | 0.5 | ... | 0.2 | 2.5 | 3.1 |
| 4. பொறிகள் கருவிகள் கொள்வனவு ... | | | — | — | 10.4 | 3.9 | — | — | 10.4 | 3.9 |
| 5. கடன் மீட்பு .. | | | 3.9 | 4.7 | — | — | — | — | 3.9 | 4.7 |
| 6. நுகர்வு .. | | | 1.1 | 2.8 | 0.6 | 0.3 | — | 0.2 | 1.7 | 3.3 |
| 7. வீடமைப்பு மின்னூட்டல், நீர்வழங்கள் ... | | | 20.7 | 30.4 | 2.7 | 1.4 | — | 0.1 | 23.4 | 31.9 |
| 8. வர்த்தகமும். ஏனையவையும் ... | | | 5.0 | 11.7 | 7.0 | 9.7 | 5.1 | 4.7 | 17.1 | 26.1 |
| மொத்தம் ... | 19.6 | 32.8 | 39.3 | 58.1 | 42.9 | 38.6 | 10.5 | 27.9 | 112.3 | 157.5 |

* தற்காலிகம்.
** திருத்தப்பட்டது.
(அ) நகை அடைவு பிடித்தலின் கீழான மேலதிகப் பற்றுக்களையும் முற்பணங்களையும் தவிர்த்து
(ஆ) அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின் கீழ்.
(இ) அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்களை உள்ளடக்கும்.

மூலங்கள்: மக்கள் வங்கி
இலங்கை வங்கி
வரையறுக்கப்பட்ட அட்டன் நசனல் வங்கி